
பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று




எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்,
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரு மிந்நாட்டு மன்னர் (பாரதி)

[வாரப்பதிப்பு]


ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். (குறள்)

மாலை க — குரோதன-ஷு ஐப்பசி-மீ கூஉ (25—10—25) ஞாயிற்றுக்கிழமை — மலர் உ௫
ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளிவரும்.

# வருட சந்தா ரூபாய் மூன்றுதான்.

## வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் நான்கு.



மகாத்மா காந்திக்கு ஜே.

வந்தேமாதரம்! அல்லாஹு—அக்பர்!!

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

### காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே சங்கரப்ப செட்டியார் கை நூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா)

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர் எம் எஸ் சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கை நூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## நூற்போர் சங்கஸ்தாபனமும். தீண்டாமை விலக்கு சங்கஸ்தாபனமும்.

ஸ்ரீமான். ஈ. வி. இராமசாமி நாயக்கர் நூற்போர் சங்கம் ஏற்படுத்துவதை முன்னிட்டும், தீண்டாமை விலக்கு சங்கஸ்தாபனத்தை முன்னிட்டும் தஞ்சை கும்பகோணம், மாயவரம் முதலிய விடங்களுக்கு இம்மாதம் 19, 20, 21-தேதிகளில் சென்று, தஞ்சாவூரில் 19-ந் தேதி கரந்தை சன்மார்க்க சபை கழகத்தில் சுமார் 30 மெம்பர்களுட்பட, நூற்போர்சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அன்று மாலை காந்தி சதுக்கத்தில், ஸ்ரீமான் நடராஜனின் அக்கிராசனத்தின் கீழ் கதர்பற்றிதீண்டாமை முதலியவற்றைப் பொதுக்கூட்டத்தில் உபந்யாசித்து விட்டு, மறுநாள் காலை கும்பகோணம் சென்று, அங்கும் நூற்போர சங்கம் ஏற்பாடு செய்து, அன்று மாலை கும்பகோணம் பாலிய நாடார் வாசகசாலையாரின் அழைப்புக்கிணங்க, சென்று அவர்களால் படித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதில் கூறுமுகத்தான், கதரைப் பற்றியும், தீண்டாமை ஒழியவேண்டிய அவசியத்தைப் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட்டு விட்டு சாரங்கபாணி சுவாமி சந்நிதியில் ஸ்ரீமான் எஸ். இராமநாதன் அக்ராசனத்தின் கீழ், சுமார் 2000 பேருக்குமேற்பட்ட ஜனங்கள் உள்ள கூட்டத்தில் காங்கிரஸ் கமிட்டி உபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்ட பின் கதர், தீண்டாமை விலக்கு, நூற்போர் சங்கத்தின் அவசியம், இவற்றைப் பற்றி விரிவாகப் பேசி, நூற்போர் சங்கத்திற்கு அங்கத்தினர்களும் சேர்க்கப்பட்டது. ஜஸ்டிஸ், மிதவாத கக்ஷிகளைச் சேர்ந்தவர்களுங்கூட, நூற்போர் சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தார்கள். மறுநாள் காலையில், மாயவரம் சென்று, அன்று மாலை திருவளந்தூர், படித்துறையில் ஸ்ரீமான், சின்னையா பிள்ளையின் அக்ராசனத்தின் கீழ் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் கதர் தீண்டாமை தற்கால ராஜீய நிலை முதலியவைகளைப்பற்றிப் பேசி நூற்போர் சங்கத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்ததோடு, ஸ்ரீமான், சின்னையா பிள்ளையின் பிரேரபணையின் பேரில் தமிழ் நாட்டிற்கே பொதுவாக தீண்டாமை விலக்கு கமிட்டி யொன்று ஸ்தாபனஞ்செய்து, அதற்குத் தற்கால ஏற்பாடாக ஸ்ரீமான் எஸ். ராமநாதனவர்களை காரியதரிசியாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. இத்தீண்டாமை விலக்குக் கமிட்டியானது தமிழ் நாட்டில் எங்கெங்கு தீண்டாதார்களென் பேருக்குப் பொது உரிமைகள் அளிக்கப்படாமல் கொடுமை செய்யப் பட்டு வருகின்றதோ, அவ்வவ்விடங்களிலெல்லாம், பிரசாரம் செய்வதும் அஹிம்சா தர்மத்தோடு அவசிய மேற்பட்டால் சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் முதலியன செய்வதும் அதன் கொள்கைளாகும். இக்கூட்டத்துக்கு விஜயம் செய்திருந்த கும்பகோணம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீமான். மருத்தூர் கந்தசாமி பிள்ளை முதலிய மிராஸ்தார்களும், இக்கமிட்டியில் அங்கத்தினர்களாயிருக்க ஒப்புக்கொண்டதோடு, இக் கமிட்டிக்கு வேண்டிய, ஆள் மாகாணம், திரவிய சகாயம் முதலியவைகள் செய்வதாகவும் வாக்குக் கொடுத்தார்கள். இத்தீண்டாமை விலக்குக் கமிட்டிக்கு வேலை செய்வதற்கும், சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு முதலியவைகளுக்கும், தயாராயிருக்கிற பிரசாரர்களும், தொண்டர்களும் ஸ்ரீமான். இராமநாதனவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளவேண்டியது. என்றும பிரசாரம் செய்யும் தொண்டர்களுக்கு சாப்பாடும், ரெயில் செலவும் மாத்திரம் கமிட்டியாரால் இலவசமாய்க் கொடுக்கப்படும் என்றும், இதற்குக் கட்டுப்பட்டவர்கள் மாத்திரம தெரியப்படுத்திக்கொள்ளவேண்டியது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒரு நிருபர்.

## தஞ்சை ஜில்லா நாடார் மகாஜன சங்கம். 2-வது மகா நாடு, கும்பகோணம்.

தஞ்சை ஜில்லா நாடார் மகாஜன சங்கம் 2-வது மகாநாடு நவம்பர் மாதம் 14, 15 தேதிகளுக்குச் சரியான குரோதன வருஷம் ஐப்பசி-மாதம் 29, 30-ந் தேதிகளில் கும்பகோணத்தில் நடைபெறும். தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீமான். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார். மகாநாட்டில் தலைமை வகிக்க, அருப்புக் கோட்டை, "நாடார் குலமித்திரன்" பத்திராதிபர். ஸ்ரீமான். எஸ். ஏ. முத்துநாடாரவர்கள் அன்புடன் ஒப்புக் கொண்டிருக்கிறார். மகாநாட்டிற்கு நாடார் மகாஜன சங்க நிர்வாகிகளும், குலத்தலைவர்களிலநேகரும் விஜயம் செய்வார்கள். மகாநாட்டில், நாடார் குலத்தவர்களின் முன்னேற்றத்திற்குறித்தாயுள்ள கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், ஐக்கியம் முதலியவைகளைப் பற்றி தீர்மானங்கள் செய்து, அவற்றை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரக்கூடிய வழிகளைப் பற்றியும் யோசிக்கப்படும. மற்றும் விபரம் அறிய விரும்புவோர், தஞ்சை ஜில்லா நாடார் மகாஜன சங்கம் 2-வது மகாநாடு, உபசாரணைக் கமிட்டி ஆபீஸ், பெரியதெரு கும்பகோணம், என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும். மகாநாட்டின் செலவிற்கென 1-வது வகுப்புக்கு ரூ. 5-ம், 2-வது வகுப்புக்கு ரூ. 4-ம், 3-வது வகுப்புக்கு ரூ. 3-ம், 4 வது வகுப்புக்கு ரூ. 1-ம் (போஜனமில்லாமல்) விதிக்கப்பட்டிருக்கிறது என வரவேற்புக் கமிட்டித் தலைவர் நமக்கு அறிவிக்கிறார்.

## தஞ்சை ஜில்லா இசை வேளாளர் மகாநாடு.

20—10—25-ந்தேதி மாயவரம் கொரநாடு சங்கக்கட்டிடத்தில் உபசரணைக் கூட்டம் நடைபெற்றது. திருவிழிமழலை, ஸ்ரீமான். அ. ரு. சுவாமிநாத பிள்ளையை உபசரணைத் தலைவராகவும், திருவாடுதுறை ஸ்ரீமான். இராஜரத்தினம் பிள்ளையைக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு 14—11—25-ந்தேதி சனிக்கிழமையன்று கொரநாட்டில் மகாநாடு நடத்துவதாய்த் தீர்மானிக்கப் பட்டது. மகாநாட்டுக்குத் தலைவராக, பெருந்துறை தேசபக்தர் ஸ்ரீமான். எஸ். ஏ. கணேச முதலியாரைத் தெரிந்தெடுக்கப்பட்டது. மகாநாட்டுக்குத் தமிழ் நாட்டில் உண்மை தேசபக்தர்களான, ஸ்ரீமான்கள். திரு. வி. கலியாணசுந்திர முதலியார், ஈ. வி. இராமசாமி நாயக்கர், ம. ரா. குமாசாமி பிள்ளை முதலியவர்கள் விஜயம் செய்வார்கள். மகா நாடு சம்மந்தமாய் தகவல் விரும்புவோர் ஸ்ரீமதி. தில்லையம்மாள் நெ. 25, வடக்கு வீதி கொரநாடு, மாயவரம் என்ற விலாசத்திற்கு எழுதவும், என்று பொது காரியதரிசி ஸ்ரீமதி. ஆர். ராமாமிர்தம்மாள் எழுதுகிறார்.


இனாம்! இனாம்!!

அறு வருஷத்திய காலண்டரும், புஸ்தக சமாச்சாரங்களடங்கிய பத்திரிகையும் தபால் செலவின்றி அனுப்புவோம்.

ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் (P. O) சென்னை.

**பெயர் பெற்ற ஊத்துக்குளி சுத்தக்கத்தர்.**

50x16குஞ்சம் அச்சில் நெசவு அழுத்தமும் நயமுள்ளதாயும் கதர்போர்டின் விலைக்கு விற்கப்படும். வேஷ்டி, துண்டு, காதி ஈரிழை கலர் வெள்ளைக் கோட்டிங் மற்ற எல்லா தினுசுகளும் கிடைக்கும். விலை விபரங்களுக்கு எழுதவும். அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

K. V. குப்புசாமி அய்யர்,
கதர் வியாபாரம், ஊத்துக்குளி, S. I. R.

**"தேசோபகாரி"**

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.
மானேஜர், "தேசோபகாரி" லிமிடெட்.
45-36வது வீதி, ரங்கூன்.

மோதிரத்திலும் ஓர் ஆச்சரியம்!

**பாரிஸ் லேடிகளின் லீலாவிநோத போட்டோ மோரம்.**

இம்மோதிரத்தின் ஆச்சரியம் யாதெனில், இதில் கடுகளவு பிரமாணம் துவாரம் உண்டு. அதின் மூலமாகப் பார்க்க அதில் பாரிஸ் தேசத்தின் பெண்மணிகள் பலவித லீலைகளுடன் ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருப்பதையும், இன்னும் பலவித ஆச்சரியங்களும் காணலாம்.

இதன் கிரயம் 1-க்கு ரூ. 1-4.

**பாரீஸ் லேடிகளின் அழகிய பெட்ரூம் போட்டோ படங்கள்.**

இவை பார்ப்போர் மனதுக்கு குதூகலத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்கும். பாரிஸ் தேச பெண்மணிகளின் ரூபலாவண்யமும், லீலா விநோதமும் இதில் காணலாம். பெட்ரூம்களில் வைப்பதற்கு இவை வெகு சுந்திரமாயிருக்கும்.

12-படங்கள் கொண்ட செட் 1-க்கு
விலை ரூபாய் 2.

ஓ. எம். வி. கம்பெனி.
(23-வது பீட்) மதாரஸ்.

## சென்னை லோகல் போர்டு சட்டம்.

### ஸ்ரீமான். வீரையனின் திருத்த மசோதா.

1920-ம் வருடத்திய ஸ்தலஸ்தாபன போர்டு சட்டத்தைத் திருத்தும்படி, ஸ்ரீமான். வீரையன் எம். எல். ஸி. கீழ்கண்ட மசோதாவை அடுத்த சட்டசபையில் கொண்டு வரப் போவதாகவும், அதை எல்லா அங்கத்தினர்களும் ஆதரிக்க வேண்டுமென்றும் அறிவிக்கிறார்.

### சென்னை ஸ்தலஸ்தாபன போர்டு சட்ட திருத்த மசோதா.

1920-ம் வருடத்திய சென்னை ஸ்தலஸ்தாபன போர்டு சட்டத்தை அடியிற்கண்டவாறு மாற்றவேண்டும்.

(1) இந்தச் சட்டமானது, 1925-ம் வருடத்திய சென்னை லோகல் போர்டு திருத்தப்பட்ட சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) 157-வது பிரிவுக்குப் பின் 15 (ஏ) எந்த பொது ரஸ்தா, தெரு. அல்லது பாதை வழியாக நடந்து போகிற அல்லது அதைச் சட்டப் பிரகாரம் உபயோகிக்கிற எந்த நபரையும, எவரும் தடை செய்யக்கூடாது, என்னும் புதிய பிரிவு ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

(3) 124-1. பிரிவில் "குடியிப்பவர்களின் சௌகரியம்" என்னும வாசகத்திற்கு அடுத்தாற் போல் "மேறகண்ட காரணங்களுக்காக அவை ஜாதி மத வித்தியாசமின்றி, சகல ஜனங்களாலும் தாராளமாய் உபயோகிக்கப்பட்டதாய் இருக்க வேண்டும்" என்னும் வார்த்தைகள் சேர்க்கப்படவேண்டும்.

(4) 167 - பிரிவிலுள்ள, "பொது மார்க்கட்டுகள்" என்ற வார்த்தைகளுக்கு அடுத்தாற்போல், "அந்த மார்க்கட்டுகளை சகல ஜனங்களும ஜாதி, மத வித்தியாசமின்றி தாராளமாய் உபயோகப்படுததலாம்" என்னும் வார்த்தைகள் சேர்க்கப்படவேண்டும்.

### 8-வது ஷெடியூலில்.

1. 123 (1)-வது பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிற, தண்டனைக்குப் பின் "எந்த ஜாதி, மதம், வகுப்பு முதலியவற்றைச் சேர்ந்த எந்த ஆளையானாலும் சரி தடை செய்தால் அபராதம் ரூ. 50" என்று சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(2) 157-வது பிரிவில் குறிக்கப்பட்ட தண்டனைக்குப்பின் 157 (ஏ) எந்த பொது ரஸ்தா, தெரு அல்லது பாதையை உபயோகிக்கிற எநத நபரையாவது, சட்ட விரோதமாய் தடை செய்தால், அபராதம் ரூ. 50 "என்று சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(3) 166 (1)-வது பிரிவில் எற்படுத்தியிருக்கிற தண்டனைக்குப் பின் "எந்த பொது மார்க்கட்டையாவது உபயோகிக்கிற எந்த ஆளையாவது சட்டத்துக்கு விரோதமாகத் தடை செய்தால்" அபராதம் ரூ. 100 என்று சேர்த்துக்கொள்ள வேண்டும்.

எந்த நகரம் அல்லது கிராமத்திலுள்ள பொது ரஸ்தா, தெரு அல்லது பாதை வழியாக எந்த வகுப்பைச் சேர்ந்த ஆட்களும் நடந்து போவதைப்பற்றி, தடையொன்றுமில்லையென்றும், மேலும் எந்த பொது ஆபீஸ் கட்டிடம், கிணறு, குளம் பொது ஜன வேலை நடக்கிற கட்டிடங்கள் முதலியவைகளை ஏனைய ஜாதி இந்துக்கள் எந்த விதமாய் உபயோகிக்கிறார்களோ, அதைப் போலவே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், அவைகளை உபயோகித்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லையென்றும், சென்னை சட்ட சபையில் 1924-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 22-ந் தேதி ஓர் தீர்மானம் நிறைவேறப்பட்டது. அதே தீர்மானத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு சென்ற செப்டம்பர் மீ 25-ந் தேதி கவர்ன்மெண்டார் ஓர் உத்திரவு பிறப்பித்துள்ளார்கள். அந்த உத்திரவு ஸ்தலஸ்தாபன போர்டு தலைவர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது. எனினும், அதனால் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. ஆகவே அந்த உத்திரவை சட்டரூபமாக்கி ஊர்ஜிதப்படுத்தவே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

குறிப்பு —

ஸ்ரீமான். வீரையனின், சென்னை லோகல் போர்டு சட்டத்திருத்த மசோதாவை, மேலே வெளியிட்டிருக்கிறோம். இம்மசோதா, இம்மாகாணத்திற்கு எவ்வளவு அவசியமென்பதை வாசகர்கள் உணர்ந்திருப்பார்கள். நமது தேசமக்களில் ஒரு சாராரை, ஒடுக்கப்பட்டவர்களென ஒதுக்கி வைத்து, அவர்களுக்கு சமத்வம் காட்டாது, அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோமென எதைப்பற்றி யெல்லாமோ பேசுவது வெறும் ஜம்பமேயன்றி வேறல்ல. 1924-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 22-ந் தேதி நடந்த சென்னை சட்டசபையில், பொது ரஸ்தா, வீதி, பாதை, குளங்கள், கிணறுகள் முதலியவைகளை எல்லா ஜாதியாரும், ஜாதி மத பேதமின்றி அநுபவித்துக் கொள்ளலாம் என ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஆனால், தண்டனையின் போக்கு காட்டப்படாததால், அத்தீர்மானம் சாரமற்றதாகிவிட்டது. அதனை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவர வேண்டுமாயின், இத்தகைய திருத்தம் முற்றிலும் அவசியமேயாகும். இம்மசோதாவை ஒத்துழைப்பை விரும்பும் சட்டசபை மெம்பர்கள் யாவரும் ஏகமனதுடன் ஆதரிப்பார்களென எதிர் பார்க்கிறோம்.

---

## பட்டாசு சத்தம்

### பொறுக்க முடியவில்லை.

பம்பாய் நகரில் தீபாவளியன்று 12 வயதுள்ள ஒரு இந்துப் பெண் சீமை வெடி என்னும் பட்டாசுக் கட்டைக் கொளுத்தி ஆனந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கையில், அந்த சத்தம் ஒரு ஐரோப்பிய சார்ஜண்டுக்கு நாரசம்போல் காதைத் துளைத்ததாம். உடனே துரைக்குக் கோபம் வந்துவிட்டது. எடுத்தார் கையில் துப்பாக்கியை. அந்தப் பெண்ணின் மீது சுட்டுத் தலையில் காயப்படுத்தினார். அத்துடன் நிற்கவில்லை சார்ஜண்டு துரை ஆத்திரம் பொங்கி தெருவில் போகிறவர்களை யெல்லாம் சுட ஆரம்பித்தார். ஐந்து பேருக்குக் காயம் உண்டாயிற்று. இதைக் குறித்த விசாரணை இவர் இலாக்காத் தலைவர் நடத்தி வருகிறார்.

### விரிவான விவரம்.

தமது குழந்தைக்கு தேக அசௌக்யமாயிருந்தபடியால், அவருக்கு சின வெடிசத்தத்தைக் கேட்டதும் அருவருப்பு உண்டாயிற்று. அதன் மேல் குண்டு போடாமல் வெறும் சத்தம் செய்யும் துப்பாக்கியை எடுத்துப் பட்டாசு சுட்டுக்கொண்டிருந்த குழந்தைகளை வெருட்டப் பார்த்தார். அந்தத் துப்பாக்கியில் ஈய குண்டுகள் போட்டிருந்தனவென்று தமக்குத் தெரியாதாம். சுட்டதற்குப் பிறகு கூடயாருக்காவது காயம் பட்டது கூடதெரியாது துப்பாக்கியை மேல் நோக்கிச் சுட்டார். கொஞ்ச நேரம் கழித்துத் தான் தமது செய்கையால் விபத்து நேர்ந்ததாகக் கண்டு கொண்டார். காயம்பட்ட குழந்தை ஆஸ்பத்திரியில் கிடக்கிறது.

---

## மகாத்மாவின் மதம்.

ஐக்கிய மாகாண ராஜீய மகா நாடானது, ஸீதாப்பூர் என்னுமிடத்தில் இம்மாதம் 20-ந் தேதி நடைபெற்றது. மௌலானா ஷவுக்கத் அலி தலைமை வகித்தார். அதில் மகாத்மாஜி பேசும்போது "பிரதிக்ஞையின்படி எனது செல்வாக்கு நீடித்திருக்குமானால் ஹிந்து முஸ்லீம் சச்சரவே ஏற்பட்டிருக்காது. ஆகையால், இவ்விஷயத்தைப் பற்றி இப்போது நான் பேசப் போவதில்லை. நான் ராட்டினத்தையும், கதரையும் பற்றிப் பேசப்போகிறேன். இதுவே எனது மதமாகி விட்டதால், நான் அதைப் பற்றிப் பேசாமலிருக்க முடியாது. நான் வாயாலும், கைகளாலும், நூற்றுக்கொண்டிருக்கிறேன். அக்ராசனாதிபதி பேசிக் கொண்டிருக்கையில் நூற்றுக்கொண்டுதானிருந்தேன். ஒவ்வொருவரும் ராட்டினத்தில் நூற்க ஆரம்பித்து விட்டால், இந்தியாவில் எவரும பட்டினி இருக்க நேரிடாது. விவசாயிகள் வருஷத்தில் நான்கு மாதம் நிர்ப்பந்தமாக வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களை எந்த யந்திரமும் வேலை வாங்க முடியாது. எங்கெங்கு ஜனங்கள் ராட்டினத்தில் நூற்கிறார்களோ, அங்கெல்லாம் வருமானம் அதிகரித்திருக்கிறது. வங்காளத்தில் ஒவ்வொரு தொழிலாளியின் வீட்டிலும் மாத வருமானம் இரண்டு ரூபாய் உயர்ந்திருக்கிறது. லார்டு கர்ஸன் கணக்குப்படி இந்தியரின் வருஷ வருமானம் 30 ரூபாய். ராட்டினம் ஒவ்வொருவருக்கும் இன்னும் 24 ரூபாய் கொடுக்கும். துணியின் விலை 7 அணாவாக இருந்தால் இரண்டணா விவசாயிக்கு பஞ்சுக் கிரயமாகவும், பாக்கி 5, 6 அணா நூற்பவருக்கும். நெய்பவருக்கும் போகும். கிராம நிர்மணம் ராட்டினத்தின் மூலம்தான் ஏற்பட முடியும். ஜனங்களுக்குள் கட்டுப்பாடு உண்டாவதற்காகவே நூற்போர் சங்கத்தை ஆரம்பித்திருக்கிறேன். அது ராஜீய சம்பந்தமுடையதல்ல. லார்டு ரீடிங்கும் இந்திய சோல்ஜர்களும்கூட அதில் சேரலாம் எனப் பேசியிருக்கிறார்.

---

## கிராம நிர்மாணம்.

"கிராமங்களுக்குத் திரும்புங்கள்" என்னும் பேரொலியானது இப்போது புதிதாகவல்ல, வெகு நாட்களுக்கு முன்னதாகவே அறிஞர் பலரால் கூறப்பட்டு வந்திருக்கின்றது. இதற்குக் காரண மென்னவென்றால், நகரங்களின் தொகையைப் பார்க்கிலும் நாட்டுப் புறங்களாகிய கிராமங்களின் தொகையே அதிகமானது. இத்துடன் பட்டணங்களில் செய்யப்படும் வேலையைப் பார்க்கிலும், கிராமங்களில் செய்யப்படும் வேலையானது அதிக பலனை அளிக்கக் கூடியதாயிருக்கிறது.

ராஜீய வேலையோ, சமூகவேலைகளோ மத பிரசாரங்களோ மற்றும் உருவகமாகக் கூடிய எந்தத்திட்டங்களான போதிலும் சரி, அவைகள் கிராமங்களில் செய்யப்படுமானால், அஃது சீக்கிரத்தில் சாஸ்வதமான பலனைக் கொடுப்பதை அநுபவத்தில் காணலாம்.

முன் காலத்தில் இப்போதுள்ள விதமான நாகரீகம் இருந்ததே கிடையாது. இப்போதிருப்பது போல், முன்னர் பட்டண வாசங்கள் நவீன நாகரீகத்தைப் பெற்றிருக்கவில்லை. உடையிலும், நடையிலும், பேச்சிலும், ஒழுக்கத்திலும், மற்றும் சகல காரியங்களிலும நவீன நாகரீகமானது புகுந்துவிட்டது. ஒவ்வொன்றும் மாறுதலடைந்துவிடவே, நகரங்கள் நரகங்களாகவே தோன்றுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு நவீன நாகரீகமென்பது நகரங்களை ஆக்ஷி பண்ண முந்துகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு, நகரம் நரகமாய் வருகின்றது. சுத்தமான காற்று கிடையாது. போதுமான வெளிச்சமுடைய வீடுகள் குடியிருப்புக்கு கிடையாது. தண்ணீர் கலப்பிடமிலலாத பால், மோர், எண்ணெய் கலப்பிடமில்லாத நெய் முதலியன கிடையாது. ஜனங்கள் தாராளமாய் வசிப்பதற்கான சவுகரியங்கள் இல்லை. சாக்கடை நாற்றம், ஓர் பக்கம் தெருப்புழுதி பிறிதொரு பக்கம், தொற்று நோய்களின் கொடுமை இன்னுமொரு பக்கம். நகரங்களில் சிசு மரணம் அதிகம். இம்மாதிரியான பல கஷ்டங்களில், காப்பிக் கடைகள், தேநீர் கடைகள், முதலியன ஏராளம். பரிசுத்தமான வாழ்க்கையிலிருந்து, நீண்ட காலம் ஆரோக்கியத்துடனிருக்க அங்கு வசதிக் குறைகள் ஓர் பக்கமிருக்க, நகரங்களிலிருப்போரில் பெரும்பான்மையான கல்வியுள்ளவர் அடிமைக் கல்வியைக் கற்றவர்களேயாகும். இவர்களுக்குள் ஓர் விஷயத்தைப் பற்றிப் பிரசாரஞ் செய்யவேண்டுமென்னும் அவசியமே கிடையாது. பத்திரிகைகளும், துண்டுப் பிரசுரங்களும், காசுக்குறைந்த புஸ்தகங்களும் உண்டு. இத்துடன் பலர், பல தடவைகளில் விஜயம் செய்து பிரசங்கங்கள் புரிகின்றனர். இக்காரணங்களால், விஷயம் வெகு எளிதாக நகர்ப்புறங்களில் பரவி விடுகின்றது.

கிராமங்களின் பாகங்களோ இருண்ட உலக மென்றே கூறலாம். இது உண்மையா, இல்லையா வென்பதைப்பற்றி இங்கு ருஜுப்படுத்த வேண்டிய பிரமேயமேயில்லையென்றெண்ணுகிறேன். நகர்ப்புறங்களிலுள்ளோர் சில தினங்களேனும் கிராமங்கள் சிலவற்றைச் சுற்றிப் பார்ப்பார்களாயின், நான் மேலே கூறிய உண்மை விளங்கும். ராஜீய விஷயத்தை மாத்திரம் எடுத்துக் கொள்ளுவோம். ஒத்துழையாமைத் திட்டமும், சத்தியாக்கிரகமும் காந்தியடிகளால் நமது நாட்டின் விடுதலைக்கென்று வெளியாக்கப்பட்டதும், நகர்ப்புறங்களிலேயே இதன் மகத்துவம் பெரும்பான்மையாகத் தொனித்து விளங்கிற்று.

காங்கிரஸை இவ்வியக்கங்களை சாதாரண ஜனங்களின் பெயரால் ஏற்றுக்கொண்டு, தேச மக்களுக்குக் கொடுத்தபோதிலும் பெரும்பான்மையான ஜனங்கள் அடங்கியுள்ள—பரிசுத்த வாழ்க்கையிலுள்ள கிராமவாசிகளுக்குப் போதுமானபடி எட்டவேயில்லை. இரண்டொரு கிராமங்களைத் தவிரயுற்ற கிராமங்கள் பூராவிலும் ராஜீய வெளிச்சம்படவில்லையென்று திண்ணமாய்க் கூறலாம். இதற்குக் காரணம், இப்பிரசாரம்; பத்திரிகையுடனும், தலைவர்கள், ரெயில்வே ஸ்டேஷன், மோட்டார் வசதி முதலியவைகளுடனும், மேடைப்பிரசங்கங்களுடனும், பட்டணக்கரைகளுடனும் நின்று விட்டது, கிராமங்களுக்குப போகவோ, வேலை செய்யவோ, தலைவர்கள் முன் வரவில்லை. ஆக, இதன் மகிமை நகரங்களோடு நின்றுவிட, இயக்கத்திற்குச் சரியான பலமில்லாமற்போய் விட்டதென்று கூறலாம்.

கிராமங்களில் சகல வசதிகளுமுண்டு. விவசாயம் பண்டமாற்று வியாபாரம, மற்றும் குடியிருப்புக்கான வசதிகள் நிறைய இருக்கின்றது. அங்கு வாழும் மக்கள் சுறுசுறுப்புள்ளவர்களாயும், திடகாத்திரமுள்ளவர்களாயும், பலசாலிகளாயும், தீர்க்காயுளுடனும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடம் ஆங்கிலக்கல்வியானது அடிமை முறையில் இன்னும் விரிவுடன் ஊட்டப்படவில்லை. அதற்கான காலம் இன்னும் வரவுமில்லை. இம்மாதிரி நிலைமையில் கிராம வாசிகள் நல்ல வாழ்க்கையிலிருக்கின்றார்களென்றே கூறலாம். இப்பேர்ப்பட்டவர்களிடம் ஓர் விஷயத்தைக் கூறுவோமாயின், அவர்கள் மனம் எளிதில் இவ்விஷயத்தில் பதிந்து விடுகின்றது. அங்கு செய்யப்படும் எந்த வேலையும் உருவகமான நிலைமையை அடைந்து விடுகின்றது.

கிராமவாசிகள் ஸ்படிகம் போன்ற மனதை யுடையவர்களென முன்னர் கூறினேன். அவர்கள் கடவுள் பக்தியிலும், பெரியோர் விஷயத்திலும் அசையாப் பற்றுதலுடையவர்களா யிருக்கின்றனர். இவர்களுக்கு ராஜீய ஞானமோ, சமூக ஞானமோ மிகக் குறைவாயிருப்பதால் தேசத்திலுள்ள தேசீய வாதிகள் நகர்ப்புறங்களை நாடி அங்கு பிரசாரஞ் செய்வார்களானால் வெகு சீக்கிரமாக இந்நாட்டின் விடுதலைக்கு அடிகோலியவர்களாவார்கள் என்று கூறுவேன்.

ராஜீய விஷயத்தில் காரியம் இப்படியிருந்தாலோ, சமூக விஷயத்திலும் கிராம வாசிகளின் நிலைமை வருந்தத்தக்கதாகவேயிருக்கின்றது. மனித சமூகத்தில் உயர்வு, தாழ்வு என்பதும், இதிலும் விசேஷமாக் பிராமணர்களே கடவுள் ஜாதி, அவர்களே சுவர்க்கத்தைக் கொடுக்கக்கூடியவர்கள் என்னும் பௌட்டீகமான எண்ணமும், தீண்டாமையின் உத்வேகமும் கிராமங்களில் அதிகமிருக்கின்றது. கிராமவாசிகளுக்குப் போதுமான கல்வியில்லாததாலும், அங்கு போய் தகுந்த பிரசாரம் செய்யாததாலும் இத்தகைய எண்ணங்கள் அவர்களிடமிருப்பது ஓர் ஆச்சரியமுமன்று. இக்குறைகளும் அகற்றப்படவேண்டியது அவசியம். இவற்றை யெல்லாம் கவனித்தே ஸ்ரீமான். ஈ. வி. இராமசாமி நாயக்கரவர்களும், திருப்பூரைச் சேர்ந்த அனுப்பபாளையத்தில் சில தினங்களுக்கு முன்னர் கிராமங்களில் வேலை செய்யப் போவதாகக் கூறினார். "குடி அரசு" பத்திரிக்கையும் அடிக்கடி கிராம விஷயங்களைப் பற்றியும் எழுதி வருகின்றது. சென்னை "லோகோபகாரி" பத்திரிகையும் பல தடவைகளில் கிராம புனருத்தாரணத்தைப் பற்றி எழுதி வருவதைக் கண்ணுற்று வருகிறேன். டாக்டர் வரதராஜலு நாயுடுவும் இனி கிராமங்களிலேயே தமது முழு கவனத்தையும் செலுத்தப் போவதாகக் கூறுகிறார். இப்படியே பல பெரியோரும், பத்திரிகைகளும், ஊழியர்களும் கிராம வேலைக்கென்று தமமை அர்ப்பணம செய்யக கங்கணங் கட்டிக்கொண்டிருப்பதால் கிராமங்களில் ராஜீய சமூதாய உணர்ச்சி ஏற்படுமென நம்பலாம்.

காலஞ்சென்ற தேசபந்துவும், இது விஷயத்தில் உழைக்க மிகுந்த பிரயாசை எடுத்து அதற்கென்று ஏராளமான பணங்களையும் வசூலித்து வைத்து, அதற்கென திட்டமும் ஏற்படுத்தி வேலை துவககும் சமயம் காலனுக்கிரையானார். அவர் விட்டுப்போன வேலையானது இப்போது தொடர்ந்து நடை பெற்று வருகின்றது. இதனால் கல்கத்தாவைச் சுற்றியுள்ள கிராமங்கள் பெற்றுள்ள நன்மைகள் அனந்தம்.

தமிழ் நாட்டின் கிராமங்களில் வேலை செய்ய ஓர் புதிய இயக்கம் ஒன்று ஏற்படவேண்டும். அதற்கென்று பணம் வசூலிக்கப்பட்டு, கட்டுப்பாடான திட்டமும் ஏற்படுத்தி வேலை செய்வோமானால், சீக்கிரமாக இந்நாட்டிற்கு விடுதலை உண்டாக்கலாம். இவ்வேண்டுகோளை தமிழ் நாட்டின் அறிஞர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

ஓர் அபிமானி.

## ஒரு கடிதம்.

இத்தென்னாட்டில் தற்காலமிருக்கக் கூடிய ஜாதித் துவேஷத்தை அறவே ஒழிக்க சில காலம் வகுப்புவாரி பிரதி நிதிக் கொள்கையை உத்தியோக சாலைகளிலும் நிலைபெற செய்யவேண்டுமென்பது என்னுடைய நீண்ட கால கொள்கை. இதைக் கொண்டே பல அரசியல் கூட்டங்களிலும் பொது சபைகளிலும் நானும் எனது நண்பர்களும் பட்ட தொல்லைக்கோர் அளவில்லை, அவைகளை எல்லாம் மீண்டும் எழுதுவதனால் பெரிய கதையாக முடியுமா

தலால் அது நிற்க, தற்காலம் பல அரசியல் பிராமணர்களும் பத்திரிக்கைகளும் செய்துவரும் அட்டூழியங்களுக்கு ஓர் அளவில்லை. இவர்களுடைய அட்டூழியங்களுக்கு நற்சாக்ஷியாக மகாத்மா காந்தி விட்டுக் கொடுத்தும் ஆதரித்தும் வருவதால் அவர்களின் அட்டூழியங்கள் தினே தினே வளருகிறது. உதாரணமாக பிராமண சுதேசமித்திரன் வருஷ அனுபந்தத்தில் தேசபிரசன்னபரபு என்ற கதையை எழுதியதை எடுத்துக் காட்டியவுடன் பிசகு என்று மன்னிப்பு கேட்கையிலேயே எடுத்துக் காட்டிய சுகோதயத்தை, சேரி விழுந்தது போல் ஒவ்வொரு பாணங்களை தொடுக்கிறது. மற்ற பிராமண சுயராஜ்ய தமிழ், தமிழர்கள் பணத்தையும், சட்டசபை பக்ஷகாரபிரசாரத்தின் காரணமாக ஆரம்பிப்பதாக காங்கரஸ் பணத்தையும் வாங்கிக்கொண்டு பிராமண அபேக்ஷகர்களுக்கு ஜனைப் பிரசாரம் செய்வதுடன், மின்னொளி என்ற தலைப்பில் தினம் பிராமணர் அல்லாதாரை வைய திட்டுவதாக இருக்கிறது. இரு பிராமண தினசரி தேசபாஷ பத்திரிக்கைகள் இவ்விதம் செய்வதற்கு நாம், உடனே பிராமணரல்லாதவர்களுக்கு நன்மை செய்வதாக இருப்பின் குடி அரசு, தமிழ்நாடு, நவசக்தி முதலிய பத்திரிக்கைகளிலொன்றை தினப்பதிப்பாகவாவது அல்லது வாரம் மும்முறைப் பதிப்பாகவாவது மாற்ற வேண்டும். பிராமணரல்லாத ஆசிரியர் சங்கம் நிருவல் வேண்டும். நிற்க, தேசீய பிராமணரல்லாதவர்களுக்கு என்று தனி சங்கம் ஸ்தாபிக்க வேண்டியதற்காக நான் இத்துடன் சென்னை மாகாண தமிழ் சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டி ஒரு அப்பிளிகேஷன் பாரம் அனுப்பியிருக்கிறேன். இதன் நோக்கம், காங்கிரசை சேர்ந்த பிராமணரல்லாதவர்கள் எல்லாரும் தனி சங்கம் கண்டு அதன் மூலம் காங்கிரஸ் கொள்கையையும் வகுப்புவாரி பிரதிநிதி தத்துவத்தையும் வற்புறுத்துவது தான். இதனுடைய இதர விதிகள் பின்னால் ஒரு கமிட்டியால் நிர்ணயிக்கப்படும் வரையில இதன் வேலைகளை நானே செய்துவர தீர்மானித்துள்ளேன். இதனைப்பற்றி தங்கள் அபிப்பிராயத்துடன் உடனே தங்கள் பத்திரிக்கையில் பிரசுரிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கா. வீ. கல்யாண சுந்தரன்.
நாகலூர், செல்லூர் போஸ்டு.

## ஸ்ரீ திலகர் வித்தியாலயம்

### கல்லிடைக்குறிச்சி.

(ஓர் அபிமானி எழுதுகிறார்.)

கல்லிடைக்குறிச்சி வாசிகளே! அன்பு மிக்க சகோதரர்களே! தேசீய இயக்கத்தின் முன்னணியினின்று, சுதந்தரப் போரில் ஈடுபட்டிருக்கும் நீங்கள் இப்போது, உங்களுடைய கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமான செய்கைகளிறங்கி விட்டீர்களென்று அறிந்து ஆச்சரியமும் திகிலுமடைகிறேன். அரும்பாடு பட்டு நீங்கள் உங்களுடைய ஊரில் நிறுவிக்கொண்ட தேசீயக் கலாசாலையை, மீண்டும் அதிகார வர்க்கத்தின் ஆதரவில் விட்டுவிட முனைந்திருப்பதைக் கேட்டு உண்மையபிமானிகளின் மனம் மிக மிகப் புண்படுகின்றது. தேசீயக் கல்வியைப் புறக்கணித்து விட்டு, விபரீதமான அதிகாரவர்க்கக் கல்வியை நிலைநிறுத்துவதற்கு என்ன அவசியம் நேர்ந்துவிட்டதென்று எம்மாலறியக்கூடவில்லை. அன்பர்களே! "எண்ணித்துணிக கருமந்-துணிந்த பின் எண்ணுவமென்பதிழுக்கு" என்ற நமது தமிழ்வேத கர்த்தா திருவள்ளுவ நாயனாரின் சீரிய மொழிகளை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். ஆராயாமல், படபடத்து பாதகத்தைச் செய்யாதீர்; பதாரக காரியம் சிதறுது; சுடுமணலுக்கு அஞ்சி எரி நெருப்பில் விழுந்து விடாதீர்.

ஏன் தேசீயக் கலாசாலையை மாற்றி கவர்ன்மெண்டு உதவிப் பள்ளியாக மாற்ற வேண்டும்? தேசீயக் கலாசாலையால் உமக்கும், உமது ஊருக்கும், தமிழ் நாட்டிற்கும் நேர்ந்துள்ள கெடுதல்கள் தானெவை? கிடையாத நன்மைகள் தான் யாவை? திலகர் வித்தியாலயத்தை, ஜார்ஜ் வித்தியாலயமாக மாற்றி அதிகாரவர்க்கத்தின் ஆதரவைப் பெறுவதனுல் நீவிரடையப் போகும் நன்மைகள் எவை? இக்கேள்விகளுக்கு, நிஷபக்ஷபாதமான மனத்துடன், விடைகளை ஆலோசித்துப் பாருங்கள். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பதால், கைதான் நோவுமன்றோ?

... ... ... ...

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நீங்கள் உடன் கவனிக்க வேண்டும். அதிகாரவர்க்கத்தின் ஆதரவை நீவிர் நீக்கி தேசீயக் கலாசாலையை ஸ்தாபித்த பிறகு தமிழ் நாட்டார் பகிரங்கமாக கணக்காகப் பொருளுதவி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு உங்களால் என்ன பதில் சொல்லமுடியும்? கொடுத்த பணத்தை மீண்டும் அளிக்கப் போகிறீர்களா? அது சாத்தியமான காரியமா? பணத்தைத் திருப்பிக்கொடுக்காமல் இஷ்டம்போல் செய்துகொள்வீர்களானுல் அதென்ன நியாயம்? அது ஏமாற்றுவதாகவல்லவா கருதப்படும்? இவையெல்லாம் தவிர, தேசீயக் கலாசாலையின் நடைமுறை சரியாகவில்லை; உபாத்தியாயர்கள் தக்க திறமை வாய்ந்தவர்களில்லையென்று கருதுவீர்களாயின், அதற்கு வேண்டியன செய்வது உங்களுடைய கரத்திலேயேயிருக்கின்றது. வேண்டிய மாறுதல்களைச் செய்து கலாசாலையைச் சீர்திருத்துங்கள்.

## தமிழ் நாட்டில் பிராமணரல்லாதார் வேலை.

பாட்னாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குப் பின்னர் நமது தேசத்தில் ஓர் புதிய உணர்ச்சி மாறுதல் வேண்டாதாருக்குள்ளிருந்து உதயமாகிக் கொண்டு வருகின்றதை யாவரும் காண்கிறார்கள். பாட்னாத் தீர்மானங்களை ஆக்ஷேபித்து லாலாஜியும், அக்கமிட்டி நடைபெற்ற பின், சுயராஜ்யக்கக்ஷியினுல் நாட்டிற்கு நலனில்லை, அவர்கள் வேலையெல்லாம் வெறும் ஜம்பமென்று மௌலானா முகமதலியும், "பீபிள்" "காம்ரேட்" பத்திரிகைகளில் முறையே எழுதியிருக்கின்றனர். தமிழ் நாட்டிலோ, நான் அறிந்த அளவில் "குடி அரசு" பத்திரிகை பொன்றேபட்ட வர்த்தமானமாக இவ்விஷயத்தில் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றது.

நாம் மற்ற மாகாணங்களைக் கவனிக்காவிட்டாலும் தமிழ் நாடு சம்மந்தப்பட்டமட்டில், மாறுதல் வேண்டாதவர்களின் நிலைமையைக் கவனிக்கவேண்டும். இம் மாகாணத்தில் தேசீய பிராமணர்களாலும் வைதிக பிராமணர்களாலும் பிராமணரல்லாதாருக்கு இழைக்கப்பட்டிருக்கும்—இழைக்கப்படும் தீங்கு கொஞ்சமன்று. இதைப் பன்முறை "குடி அரசு" வியக்தமாகக் கூறியிருப்பதுடன், சென்ற வாரத்தின் உபதலையங்கத்தில் "அம்பலத்து அதிசயம்" என்னும் தலைப்பின் கீழ் எழுதியிருப்பதைக் கண்ணுற்று திடுக்கிட்டுப் போனேன். அதில் கூறியிருப்பன ஒவ்வொன்றும், உண்மையானவைகளாயிருப்பதுடன், இனி மேலும், தேசீய பிராமணரல்லாதார் உஷாராயிருக்கவேண்டுமென எச்சரித்துக் காட்டக் கூடியதாயிருக்கின்றது.


தேசீய பிராமணர்களிலநேகர் சுயராஜ்யக்கக்ஷியென்னும் மாயப் போர்வையைப் போர்த்திக்கொண்டு காங்கிரஸ் பேரைச் சொல்லி ஜஸ்டிஸ் கட்சியையும், தேச நலன்கட்காகப் பல தியாகங்களைச் செய்த பிராமணரல்லாதாரையும், தீண்டாதவர்களையும் தாழ்த்திவிட வேண்டுமென எண்ணிச் செய்கிற வேலையை "குடி அரசு" பத்திரிகை வெளியிட்டு வேலை செய்வது போன்று, ஏன் மற்றும் பிராமணரல்லாத பத்திரிகைகளாகிய "தமிழ் நாடு" "நவசக்தி" "லோகோபகாரி" "நவ இந்தியா" முதலியன செய்யக் கூடாதென்று கேட்கிறேன். வெறுமனே, தீண்டாமை ஒழிய வேண்டுமென எழுதுவதால் மட்டும் எவ்விதப் பயனும் விளைந்துவிடப் போவதில்லை. இதற்குக் காரணமான வைதீகப் பிராமணர்களின் பொய் வேதாந்தங்கள் இன்னதென்பதை உடைத்தெறிய வேண்டும்.

வெள்ளைக்காரரின் கைகுலுக்குதலுக்கும், பட்டத்திற்கும், பணத்திற்கும் ஆசைப்பட்டு இந்திய மக்களில் அநேகர் அவர்களுடன் சேர்ந்து தம் தேசத்தாரைக் காட்டிக்கொடுப்பது போலவே, பிராமணரல்லாதாரில் சிலரும், பிராமணரின் புன்சிரிப்பிலும், பணத்திலும் ஏதோ சில பட்டத்திலும் மயங்கி, அவர்கள் பக்கம் சேர்ந்து தம் இனத்தவர்களைக் காட்டிக் கொடுப்பது வெட்கமான காரியமாகும்.

பிராமணர்கள் ஓர் காரியத்தைச் சாதிக்க, எவ்வளவு ஒற்றுமையுடனும், கட்டுப்பாடுடனும் இருந்து வேலை செய்கின்றார்களென்பதையும், அவர்கள் பத்திரிக்கைகள் எவ்வளவு ஒற்றுமையாய் அவ்விஷயத்தில் எழுதுகின்றனவென்பதையும் பிராமணரல்லாதார் கவனிக்க வேண்டாமா?

ஆகவே, "குடி அரசில்" கூறியுள்ளபடி, தேசீய பிராமணரல்லாதார் சங்கமும், பிராமணரல்லாதாரின் பத்திரிகைகள் சங்கமும் அவசியம் உடனே ஸ்தாபிக்கவேண்டுமென்பதை முற்றிலும் ஆதரிக்கிறேன்.

பொதுஜன ஊழியன்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-௵ ஐப்பசி-மீ கூ-உ

# "சுயராஜ்யக் கட்சியின் பரிசுத்தம்."

## விளம்பரம்.

பாட்னா முடிவிற்குப்பிறகு, சுயராஜ்யக்கக்ஷியார் வெற்றிக்கொடிபிடித்து திக்விஜயம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். காரியத்தில் எப்படி யிருந்த போதிலும், இவர்கள் போகிற பக்கங்களில் எவ்வளவு இழிவு பட்டுக் கொண்டு வந்தாலும் பத்திரிக்கைகளில் மாத்திரம், "சுயராஜ்யக் கட்சிக்கு வெற்றி மேல் வெற்றி, சுயராஜ்யக் கட்சி ஸ்தாபனம். செய்து, சுயராஜ்யக் கட்சியில் அவர் சேர்ந்தார். இவர் சேர்ந்தார். என்கிற விளம்பரங்களுக்குக் குறைவில்லை. ஆனால் கட்சிக்குள்ளிருக்கிற பழைய தலைவர்களோ ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதங்களால் சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தினந்தோறும் விடிந்தெழுந்தால் சுயராஜ்யக் கக்ஷியாரின் நடபடிக்கைக்குச் சமாதானம் சொல்லுவதும், சரியான சமாதானம் ஒன்றும் கிடைக்காத சந்தர்ப்பங்களில் மகாத்மாவின் பெயரைச் சொல்லி மழுப்பி விடுவதுமான தந்திரங்களோடே, பாமர ஜனங்களை ஏமாற்றிக் கொண்டுவரப் படுகிறது.

### அச்சில்லாமல் தேரோட்டம்.

சுயராஜ்யக் கக்ஷி சுயராஜ்யக் கக்ஷியென்ற பேர் மாத்திரம் இருக்கிறதே யல்லாமல், சுயராஜ்யக் கட்சிக்கென ஏற்பட்டிருக்கும் திட்டமென்ன? ராஜீய திட்டம் ஏதாவது இருக்கிறதா? பொருளாதார திட்டம் ஏதாவது இருக்கிறதா? சமூக முன்னேற்றத் திட்டம் என ஏதாவது இருக்கிறதா? வென ஊன்றிப் பார்த்தால் உத்தியோகத்தையெல்லாம் தாங்களே கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்பதைத்தான் ராஜீய திட்டமாகவும், அதன் சம்பளமெல்லாம் தங்களுக்கே வரவேண்டுமென்பது தான் பொருளாதாரத் திட்டமாகவும், இந்த உத்தியோகமும், சம்பளமும் பிராமணர்களாகிய தங்கள் ஜாதியாருக்கே வந்துவிட வேண்டுமென்பது தான் சமூக திட்டமாகவும் வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. வேறொன்றும் காணோம். இதைத்தவிர தேச நலத்தை யுத்தேசித்தாவது, ஏழை ஜனங்களையும், தொழிலாளரையும் உத்தேசித்தாவது, தாழ்த்தப் பட்டவர்களும், கொடுமை செய்யப்பட்டவர்களுமான தீண்டாதார் முதலியோர் முற்போக்கைப் பற்றியாவது ஏதாவது ஓர் திட்டம் சுயராஜ்யக் கக்ஷியினர் வசமிருக்கிறதா? என்றுவது பார்த்தால், கதரிலும் நம்பிக்கையில்லை. தீண்டாமையும் காங்கிரசில் இருக்கக் கூடாது. பிராமணரல்லாதார் வசம் இருக்கும் உத்தியோகங்களையும், பிடுங்கிக் கொள்ள வேண்டும் என்கிற கொள்கைதான் நிறைந்து கிடக்கிறது. ஆனால் இந்த விஷயம் பாமார ஜனங்களுக்குத் தெரியாமலிருக்கும் பொருட்டாக, கூட்டங்களுக்கு வருகிற போது மாத்திரம் இரண்டொருவர் கதர் துணிகளை உடுத்தியும், கதர் குல்லாயைப் போட்டும், பொது ஜனங்களை ஏமாற்றுவதும், "தன்னைப் பொறுத்தவரையில் ஜாதிவித்தியாசம் கிடையாது. ஆனால், தன் ஜாதியார் ஒப்புக்கொள்ளாததினால் அதை இப்போது ஒரு கொள்கையாய் எடுத்துக் கொள்ளுவதற்கில்லை" என்று சொல்விட்டு மகாத்மா காந்தியை வைவதற்கும், தங்கள ஜாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும், "பிராமணன்" என்ற ஓர் பத்திரிக்கையை நடத்தப் பணம் கொடுப்பதும், வருணாசிரமமென்னும் பிராமணாதிக்கத்தை நிலை நிறுத்த சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு அக்கிராசனாதிபதியாயிருப்பதும் ஆன காரியங்களைச் செய்து கொண்டு, பிராமணரல்லாதாரில் சில சுயநலஅபிமானிகளையும், உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டவர்களையும் தங்கள் சுயாதீனம் செய்து கொண்டு, அவர்களைக் கொண்டே தங்களை விளம்பரம் செய்து கொள்ளுவதும், அவர்களைக்கொண்டே தங்கள் கட்சிப்பிரசாரம் செய்து கொள்ளுவதும், வயிற்றுக் கொடுமையினால் கஷ்டபடுகிறவர்களையும், கீர்த்திக்கு ஆசைப்படுகிறவர்களையும் நிலையில்லாத பயங்கொள்ளிகளையும், காசு பணம் கொடுத்தும், விளம்பரங்களுக்கு இடங்கொடுத்தும் தங்கள் சுயாதீனப்படுத்தி கொண்டு, பிராமணரல்லாதாரையும், மற்றும் பல கக்ஷிக்காரர்களையும், காட்டிக் கொடுக்கும்படியும், வையும்படியும் செய்து அச்சில்லாமல் தேரை ஓட்டிக்கொண்டு போகிறார்கள்

### இதுவரையில் செய்தது.

சுயராஜ்யக் கட்சி ஆரம்பித்த காலத்தில் சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்ய, வெளியில் ஒத்துழையாமை செய்தால் மாத்திரம் போதாது, உள்ளே போயும் ஒத்துழையாமை செய்யவேண்டும். சட்டசபைகளைக் கைப்பற்றி முட்டுக்கட்டை போடவேண்டும். சர்க்கார் எந்த தீர்மானம் கொண்டு வந்தாலும் எதிர்க்கவேண்டும், எதிர்க்கச் சக்தி யில்லாவிட்டால் ஒரு நடபடிக்கையிலும் கலந்து கொள்ளாமல், ஒதுங்கி நிற்க வேண்டும். கமிட்டிகளிலோ, அல்லது வேறு எந்த தெரிந்தெடுப்பிலோ ஸ்தானம் பெறக் கூடாது. போக்கு வரத்து படிச் செலவு பயில் சார்ஜ் கூட வாங்குவதில்லை என்று இன்னும் பலவாறாக, சொல்லிபாமர ஜனங்களை நம்பும்படி செய்து சட்டசபை ஸ்தானங்களை வெகுவாகக் கைப்பற்றினார்கள். ஒருவாறாக உள்ளே சென்று இரட்டையாட்சியை ஒழிக்கிறோம். ஒழிக்கிறோமென்று சொல்லிக்கொண்டு, சட்டசபையிலுள்ள மந்திரி முதலிய இந்திய உத்தியோகஸ்தர்களை மாத்திரம் குறை கூறிக்கொண்டும், அவர்களை உபத்திரவப்படுத்திக்கொண்டும், கொஞ்சம் கொஞ்சமாக, சட்டசபைகளின் எல்லா நடபடிக்கைகளிலும் கலந்து எவ்வளவு உத்தியோகங்களையும், பணங்களையும் சம்பாதிக்க சாத்தியப்படுமோ, அவ்வளவிற்குத் தகுந்தபடி, கிடைக்கக் கூடாத இடத்தில் வேண்டாமெனச் சொல்லிக்கொண்டும், கிடைக்கக் கூடிய இடத்தில், அது வேறே சங்கதி. இது வேறே சங்கதி. அது வேறே விஷயம். இது வேறே விஷயம். அந்த மாகாணத்தின் நிலை வேறு. இந்த மாகாணத்தின் நிலை வேறு எனச்சொல்லிக்கொண்டும், இது கக்ஷி சம்மதத்தின் பேரில் செய்யப்பட்டது. அது கட்சி சம்மதமில்லாமல் செய்யப்பட்டது. எனச்சொல்லிக்கொண்டும் அகப்பட்டவரையிலும் அபகரித்துக் கொண்டு வருகிறார்கள். கேட்டால், சுயராஜ்யக் கட்சியாரின் தீர்மானமென்றும் சமயத்துக்குத் தக்கப்படி நடந்து கொள்வது ராஜ தந்திரமென்னும் சொல்லிக்கொண்டு ஏமாற்றுகிறார்கள்.

இதுவரையில் சில மாகாணங்களில் தங்கள் உத்தேசப்படி பெரும்பான்மை ஸ்தானங்களைக்கைப்பற்றி மந்திரி பதவிகளை ஒழித்தார்கள். மேலே இனி என்ன செய்வதென்று அதைப்பற்றி யாதொரு வார்த்தையும் காணோம். ஆனால், அதை யார் பெறுவதென்கிற ஓர் முடிவுக்கு தங்களுக்கு இன்னும் வராததால், மந்திரி பதவியை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒப்புக்கொள்ளவேண்டுமெனச் சிலரும், தங்கள் மாகாணத்தில் தங்களுக்குக் கிடையாதென்னும் எண்ணமுள்ளவர்கள் கிடைக்கிற சந்தர்ப்பம் வரையில் வேண்டாம், வேண்டாமெனச் சிலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கிடைக்கக்கூடிய இவர்களில் வெகு சீக்கிரம் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள் அதிலொன்றும் ஆக்ஷேபனையில்லை. தவிர, 4000, 5000 சம்பளம் பெறும் உத்தியோகங்கள், பல பெற்றாகி விட்டது. தினம் 100, 200 கமிஷன் கிடைக்கக்கூடிய கமிட்டிகளில் ஸ்தானம் பெற்றாகி விட்டது. சில ஸ்தானங்கள் உத்தியோகம் ஏற்றுக்கொண்டது, கட்சி கொள்கைகளை மறந்து கட்சியையே விலகும்படியாகி விட்டது உதாரணமாக ஸ்ரீமான்கள். படேலும், தாம்பேயும். சட்டசபை தலைவர்கள் ஸ்தானங்களைப் பெற்ற காரணங்களால், தாங்கள் இனி அக்கட்சிக் காரர்களென்னும் கொள்கைகளிலிருக்க முடியாமல், ஒரு கட்சியிலும் சேராத பொது மனிதர்களாயிருக்க வேண்டியதென்றும் அதனால், ஒருவர் வைஸிராய் வீட்டுக்கு பத்து தடவை போவதினால் குற்றமில்லையென்றும், மற்றொருவர் நிர்வாகசபை அங்கத்தினர் பதவியை ஒப்புக்

கொள்வதில் குற்றமில்லையென்றும் நியாயம் சொல்லி அந்தப் படிக்குச் செய்துமாகிவிட்டது. இவற்றை, கட்சியின் முக்யஸ்தர்களான தலைவர், உபதலைவர், மாகாணத் தலைவர், காரியதரிசி முதலியோர்களும் ஒப்புக்கொண்டும் ஆகிவிட்டது. பொதுஜனங்களுக்குப் பயந்து கொண்டு ஸ்ரீமான். தாம்பே விஷயத்தில் மட்டும், கட்சியின் சம்மதமிராமல் போனது மாத்திரம் தப்பிதமென்றும் அதை துரோகம் என்றும் வெட்கம் என்றும் சொல்லி வருகிறார்கள். ஸ்ரீமான். தாம்பேக்கோ, கக்ஷியின் சம்மதம் பெறுவதில், ஒருவித ஆக்ஷேபணையில்லாவிட்டாலும், சுயராஜ்யக் கட்சியின் சம்மதங்கேட்க ஆரம்பித்தால், தன்னை ஏமாற்றிவிட்டு, வேறு சுயராஜ்யக் கட்சிக்காரர் அதை ஏற்றுக்கொண்டால் என்ன செய்வதென்னும் பயத்தைக்கொண்டு, சட்டசபை அக்கிராசனராயிருக்க சம்மதம் கொடுத்ததே போதுமென்று சொல்லுகிறார்.

பம்பாய் மாகாண சுயராஜ்யக்கக்ஷித் தலைவரும், எல்லா இந்திய சுயராஜ்யக்கக்ஷி நிர்வாக சபை மெம்பருமான, ஸ்ரீமான். ஜெயகர், அவர்கள், "ஸ்ரீமான். படேல் இந்தியா சட்டசபை அக்கிராசனப் பதவியை ஒப்புக்கொண்டதற்கும், ஸ்ரீமான். தாம்பே நிர்வாகசபைப் பதவியை ஒப்புக்கொண்டதற்கும் வித்தியாசமில்லை" என்று சொல்லிவிட்டார். இவர் பம்பாய் மாகாணத்தில், சட்டஞானத்திலும், வரும்படியிலும், சென்னை ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரின் சட்டஞானத்திலும், வரும்படியிலும், இளைத்தவரல்ல. இனி, மகாராஷ்டிர தேசத்திய தலைவரும், அகில இந்திய சுயராஜ்யக்கட்சியின் உபதலைவருமான, ஸ்ரீமான். கேல்கர், "சுயராஜ்யக்கட்சியின் தலைவரும், காரியதரிசியுமான, ஸ்ரீமான்கள் மோத்திலால் நேரு, ஏ. ரெங்கசாமி ஐயங்கார் இவர்கள் இராணுவக் கமிட்டியிலும், கோர்ட்டு அவமதிப்பு மசோதா கமிட்டியிலும் ஸ்தானம் பெற்றதை விட, ஸ்ரீமான். தாம்பே நிர்வாகசபை ஸ்தானம் பெற்றது மோசமல்ல" வெனச் சொல்லிவிட்டார். இவர், சென்னையிலுள்ள ஸ்ரீமான், சீனிவாசய்யங்காருக்கும் மத்திய மாகாணத்திலுள்ள பண்டித நேருவுக்கும் ஒரு விதத்திலும் இளைத்தவரல்ல. அதோடு, ஸ்ரீமான். திலகருடைய மருமகப்பிள்ளையென்றும், பிரதம சிஷ்யரென்றும் தனி யோக்கியதை படைத்தவர். சென்னையிலுள்ள சுயராஜ்யக் கட்சிக்காரர்களோ, ஸ்ரீமான். தாம்பேயின் நியமனத்தைப்பற்றிக் கண்டிக்கக்கொண்டு வந்த கண்டனதீர்மானத்தின்போது, சுயராஜ்யக் கட்சி தலைவர்களிலொருவர் ஷை தீர்மானத்தைக் கண்டித்ததாகவும், இவ்விதம் கண்டித்தால், நமது செல்வாக்கு குறைந்து போய் விடும் என்று அவரைக் கண்டித்ததாகவும், அதனால் அவர் எழுந்து வெளியில் வந்து விட்டதாகவும் ஒரு குருவி வந்து சொல்லியிருக்கிறது. இது உண்மையற்றதாயிருந்தாலும் ஒன்றும் முழுகிப்போகவில்லை. அல்லாமலும் சர்க்கார் அதிகாரிகளின் விருந்து முதலியவற்றிற்குப், போகக்கூடாதென்று, சென்னை சுயராஜ்யக்கட்சிக்காரர் பறையடித்துக்கொண்டது பொதுஜனங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும். இப்போது, சில தினங்களுக்கு முன்பாக சென்னையில் ஓர் தபால் இலாகா அதிகாரிக்கு நடந்த விருந்திற்கு, சென்னை சுயராஜ்யக் கட்சித் தலைவர்களெல்லாம் போயிருந்தார்கள். இதன் காரணம் விருந்தாளிக்கு பூணூல் இருந்ததினாலும், தங்கள் வகுப்பாருக்கு உத்தியோகங்கள் கொடுக்கத் தகுந்த அதிகாரம் அவர் கையில் இருந்ததினாலும் குற்றமில்லையென்று நினைத்து விட்டார்கள் போலும். இதர மாகாணங்களிலேயும் இதைப் பின்பற்றுவதோடு, விருந்துகள் நடத்துவதற்குப் பணமுங் கொடுத்திருக்கிறார்கள். பணம் கொடுப்பதற்கு ஒரு நிபந்தனை மாத்திரம் வைத்துக் கொண்டிருக்கிறார்களாம். அதென்னவென்றால், தாங்கள் கொடுக்கும் பணத்தில் மாத்திரம் சாராயம் வாங்கக்கூடாதாம். வேறு யார் பணத்தில் வாங்கிக் கொண்டாலாவது, உபயோகப் படுத்திக் கொண்டாலாவது தங்களுக்குத் தோஷமில்லையாம்.

### உள்ளே ஒத்துழையாமை.

ஒத்துழையாமை யென்பது சென்னையில் சர்க்காருக்கனுகூலமாய், பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் பிராமணரல்லாதாருடன் ஒத்துழையாமை என்பது தான், சென்னை, பம்பாய். மராட்டா, முதலிய சுயராஜ்யக் கக்ஷியாரின் அகராதியில் ஏற்பட்டுப் போய்விட்டது. அல்லாமல், சுயராஜ்யக் கக்ஷி ஸ்தாபனம் செய்யும் இடங்களிலெல்லாம் ராவ் பகதூர், ராவ் சாகிப் முதலிய பட்டதாரிகளையும், ஒத்துழைப்புக் காரர்களையும், பூணூல் போட்டவர்களையும் பார்த்தே அவர்கள் வசம் ஸ்தாபனங்களை ஒப்படைக்கப்பட்டு வருகிறது. ஏனெனில் அடுத்த தேர்தலை உத்தேசித்து ஸ்தல ஸ்தாபனங்களில் பிராமணரல்லாதாருக்கு விரோதமாய் ஒரு மூச்சுப் பறந்து பார்த்தாய் விட்டது. இனி அடுத்தாற்போல் சட்டசபைத் தேர்தல்கள் இருக்கிறது. இப்பொழுதே அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பணங்களும் லக்ஷக்கணக்காய்ச் சேகரிக்க முற்பட்டாகி விட்டது. காங்கிரசையும் சுயாதீனம் செய்து கொண்டாகி விட்டது. மகாத்மாவின் சம்மதமும் கிடைத்து விட்டது

### இனி நடக்கவேண்டியதென்ன?

பிராமணர்களும், அவர்கள் இஷ்டம் போல் நடப்பதாய் வாக்குக் கொடுத்துள்ள பிராமணரல்லாதார்களும், சட்டசபை ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டியது தான். கைப்பற்றி, பிராமணரல்லாதார்களுக்காக, பிராமணரல்லாத மந்திரிகளும், செய்து வைத்துள்ள பிராமணரல்லாத அங்கத்தினர்களும், தேவஸ்தான மசோதா, சர்வகலாசாலை மசோதா, தொழிலாளரின் அனுகூலங்கள், தீண்டாதாருக்கென ஏற்பட்ட அனுகூலங்கள், சகல சமூகத்தாரும் சமத்வமாய் அநுபவிக்கக்கூடிய சில ஸ்தானங்கள், இவற்றை அடியோடு தலைகீழாகக்கவிழ்த்தி வருணாச்சிரம தருமமென்கிற பிராமணாதிக்கத்தை நிறுத்தி வெற்றிக் கொடி காட்டி, பிராமண சுயராஜ்யம் அடைவது தான் பாக்கியாயிருக்கிறது. பிராமணரல்லாதாரின் தலையெழுத்து எப்படியிருக்கிறதோ, அதைபநசரித்துத் தான் இப்போது அவர்கள் புத்தியும் போகும். ஆனால், பாமர ஜனங்கள் ஏமாந்து போகாமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுவதை விட நாம் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை.

---

## சுதேச மித்திரனின் ஜாதி புத்தி.

சுதேசமித்திரன் பத்திரிக்கை "அதிகாரவர்க்கத்திற்கு ஒரு யோசனை" என்கிற தலைப்பின் கீழ் "ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாய்க்கர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பாட்னா முடிவுக்கு விரோதமாய் தஞ்சையில் சுயராச்யக் கக்ஷியார் தேசத்திற்கு நன்மை செய்ய ஏற்பட்டவர்கள் அல்லவென்றும் சுயராச்யக்கக்ஷியாரும், இதரர்களும் கோருகிற சுயராச்யம் இந்தியாவுக்கு வேண்டியதில்லை என்று சொன்னாராம் என்றும், காங்கிரஸ்காரர் இப்படிச் சொல்லுவது அழகல்லவென்றும் சென்னை கீழ் பாக்கம் தேர்தல் ஸ்ரீமான். நாயக்கர் மனதை வாட்டிவருகிறதென்றும் இப்படிப்பட்டவர் ஜஸ்டிஸ் கட்சியிலோ வேறு கட்சியிலோ சேர்ந்து கொள்ளலாம் என்றும் எழுதி, நாயக்கர் சுயராச்யமே வேண்டாமென்று பேசியதாக பொதுஜனங்கள் நினைக்கும்படி எழுதியிருக்கிறது. இவ்வெழுத்துகளில் எவ்வளவு அயோக்கியத்தனமும் அற்பத்தனமும் நிறைந்திருக்கிறது என்பதை வாசகர்களே கவனித்துக்கொள்வார்கள்.

இதற்கு முன் பல தடவைகளில் நாம் குறிப்பிட்டிருப்பதை, இந்த பிராமண பத்திரிகை கவனிக்காமல் மானம் ஈனமின்றி மறுபடி அதே காரியத்தைச் செய்கிறது. தஞ்சையில் நமக்கு வேண்டிய சுயராச்யம் என்ன என்பதைப் பற்றியும், நமக்கு வேண்டாத சுயராச்யம் என்ன என்பதைப்பற்றியும், கதர் தீண்டாமையைப்பற்றி பேசும் பொழுது 2, 3, மணி நேரம் விபரமாய் பேசியிருக்கிறார். அந்த பேச்சுகளை கிரமமாய் எடுத்துப்போடாமல் அவர் பேசிய பேச்சிலுள்ள எழுத்துக்களைப் பிரித்து தனக்கு வேண்டியபடி வார்த்தைகளை கோர்த்துக்கொண்டு தங்கள் ஜாதி புத்தியை காட்டியிருக்கிறது. சுயராச்யம் வேண்டாமென்று இந்தியாவில் ஒரு கட்சியும் சொல்லவேயில்லை. சுயராஜ்யம் என்பது என்ன என்பதுதான் இப்போது தகராரிலிருக்கிறது. பிராமணர்கள் படிப்பதும் சர்க்காரில் உத்தியோகம் உண்டாக்குவதும், தம்பிக்கும், மகனுக்கும் தங்கள் கூட்டத்தாருக்கும் உத்தியோகம் சம்பாதித்து கொடுப்பதும் தான் சுயராச்யம் என்று சிலரும் சில கட்சிக்காரரும் நினைக்கிறார்கள். ஏழைகள் வயிராரச் சாப்பிடுவதும், நாட்டில் கைதொழில்கள் ஓங்கி தொழிலாளர் பிழைப்பதும் நாட்டில் தரித்திரம் ஒழிவதும் மனிதர் எல்லோரும் சமம் என்ற உணர்ச்சியில் சுயமரியாதையுடன் வாழ்வதும் தான் சுயராஜியம் என்று மகாத்மா உள்பட சிலர் நினைக்கிறார்கள். அதைத்தான் நாம் தேடுகிறோம். இரண்டாவதான சுயராச்யம் சுயராசயக் கட்சியாரால் வருமானால் நான் அதை ஏற்றுக்கொள்வேன், என்று மகாத்மா சொல்வது உண்மைதான். ஆனால் சுயராச்யக் கட்சியார் திட்டத்தில் இவ்வித சுயராச்யம் வருமென்கிற நம்பிக்கை எனக்கில்லை. அதினால் தான் நான் அதில் சேரவில்லை என்கிறார். இந்த இரண்டாவது பாகத்தை விட்டுவிட்டு முதல் பாகத்தை மாத்திரம் தங்கள் பத்திரிக்கைகளில் எழுதி ஏமாற்றப் பார்த்தால் யார் ஒப்புவார்கள். இதைப்பற்றி விவரமாக அடுத்த வாரம் எழுதுவோம்.

---

# பெண்கள் விடுதலை.

## (மணமகள்.)

சென்ற இதழில், இந்திய ஸ்திரீகள், என்னும் தலைப்பின் கீழ், நமது தேசத்தில் பெண்கள் பிறப்பைப்பற்றியும், அவர்கள் விஷயத்தில் செய்யப்படும் குறைகளைப் பற்றியும் விரிவாக எழுதியிருந்தேன். அதில் கூறப்பட்டவைகளைப் பார்க்கிலும், கலியாண சந்தர்ப்பத்தில் மணமக்கள் படும் கஷ்டத்தை ஒருவாறு கூறுவதால், அதற்கு விமோசன மேற்படலாமென்பது எமது நம்பிக்கையாகும்.

சில தேசங்களில், கலியாணம் பண்ணப்பட்ட புதிய தம்பதிகளிருவரும், அவரவர் பெற்றோரின் வீட்டை விட்டு நீங்கி, தனிக்குடித்தனம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். ஆனால் இந்தியாவிலோ அப்படியில்லை. பெண்ணானவள் தன் பெற்றோரை விட்டு நீங்கி, பெற்றோருடன் ஒன்றித்திருந்து காரியங்களை நடத்தும் புருஷனோடு வசிக்கவேண்டியவளாயிருக்கின்றாள்.

இந்தியாவில், பொதுவாக பெற்றோர்கள் எப்பொழுதும் தங்கள் புத்திரர்களின் விவாக விஷயத்திலேயே அதிக உற்சாகங்காட்டுகின்றனர். புத்திரிகளின் விவாகத்தையோ ஏதோ ஓர் பாரம்போல் எண்ணி அசட்டையாக நடத்தி விடுகின்றார்கள், "பையனுக்குக் கலியாணம் செய்யவேண்டும். அவன் சுகத்தைக் காணவேண்டுமென பெற்றோர் கூறுவதேயன்றி, புத்திரிகள் விஷயமாக இவ்வளவு வாஞ்சையாக வார்த்தைகளைக்கூறுவதில்லை. பெற்றோர் தமது புதல்வனுக்குக் கலியாணஞ் செய்ய வேண்டி பெணப்பிரயாசை எடுக்கும்போது, பெண்ணின் மூலமாக எவ்வளவு சொத்து கிடைக்குமென்பதை முதலாவதாகக் கவனிக்கின்றார்கள். இன்னும் பல பெற்றோர்கள், சரியான நகையுடனும், சீதனத்துடனும் தங்கள் மகனுக்கு பெண் கிடைக்குமென்று உறுதியேற்பட்டதும், தங்கள் கையில் பணமில்லாவிட்டால், எங்கேயாயினும் கடன் வாங்கி டம்பமாக கலியாணத்தில் செலவழித்து விடுகின்றனர். விவாக தினம் வந்ததும் அங்கு வைதீகத்தில் சம்பிரதாயமாக, அதாவது தெய்வ ஆசீர்வாதத்துக்காக நடைபெறும் சடங்குகள் பல. நாம் அதைப்பற்றி இவ்வமயம் ஆக்ஷேபித்துக்கூற இங்கு வரவில்லை. ஆனால், சொத்து ஒன்றைமட்டும் குறியாகக்கொண்டு செய்யப்படும் காரியங்களை மட்டுமே ஆக்ஷேபிக்கிறோம். மணப்பந்தலில், பலர் முன்பாக, பெண்ணிற்கு பரியம் மாப்பிள்ளை வீட்டுக்காரர் கொடுக்கின்றனர். அநேகமாக நகைகளாகக் கொடுக்கப்படுவதே வழக்கம். இந்த தங்க வெள்ளி நகைகளைப் பலர் இரவல் வாங்கி, அந்த சமயத்தில் பெண் வீட்டாரை ஏய்த்து விடும் பொருட்டுக் கொடுத்து விடுகின்றனர். மணமகளும் உச்சி குளிர்ந்து விடுகின்றாள். கலியாண வைபவம் முடிந்து பெண் தன் மாமனார் வீட்டுக்குப் போகிறாள். இரவல் கொடுத்த நகைக்காரர்கள் ஒவ்வொருவராக வந்து நகைகளை வாங்கிக்கொள்ளுகின்றனர். பெண்ணின் மனம் என்ன விதமாயிருக்குமென்பதை இங்கு விரித்துரைக்க வேண்டியதில்லை. தன்னை நகைகள் மூலமாக ஏய்த்துவிட்டார்களென்பதே அவள் மனதில் படுகின்றது. அவள் விசனத்திற்கு இதுவே அஸ்திபாரமாகின்றது. இதனுடன், சிலசமயங்களில் பெண்ணானவள், தன் பெற்றோர் வீட்டிலிருந்து அணிந்துவந்த நகைகளையும் மாமனார் வீட்டில் இழக்கவேண்டியதும் நேரிடுகிறது. இந்த விதமாக கல்லபட்டபகலில், "மரியாதை" என்னும் பெயருடன், கொள்ளையடிக்கப்படுகின்றதென்றே கூறவேண்டும். அந்த ஏழை பெண் என்னசெய்யக்கூடும். தனக்கு நேர்ந்துள்ள நஷ்டத்தையும், அதனால் ஏற்பட்டுள்ள துக்கத்தையும் வெளியே கூறமாட்டாதவளாக மனதில் அடக்கிக்கொள்ளுகிறாள். மதத்தின் பெயரால் ஏதோ சில சடங்குகள் விவாகதினத்தில் செய்யப்படுகின்றதேயன்றி, மற்றவை அனைத்தும் பித்தலாட்டமென்பது அவள் மனதில் புலனாகிறது.

மேற்கண்ட சம்பவம் நிகழ்ந்ததைக் கண்டு பரிதாபப்பட்டு யாராவது, அப்பெண்ணின் புருடனைக்கண்டு, "என்ன ஐயா இப்படிச் செய்யலாமா? உங்கள் இரவல் நகைபோனாலும் போகட்டும். அப்பெண் கொண்டுவந்ததையும் தொலைத்துவிட்டீர்களே"? எனக் கேட்டால், "குடும்பமென்றால் பலவிதமும் இருக்கும்," எனவெகுசாதுவாய் பதில்சொல்லிவிடுவதன்றி. விவாகம் பண்ணப்படும்போது, தெய்வசந்நிதானத்தில் இருப்பதாகவே இந்த மதத்தின் கொள்கை அங்கேயே, இவ்வித பித்தலாட்டங்களும், பெருமோசங்களும் துணிச்சலுடன் செய்யப்படுவதை தேசத்தார் நன்கு கவனிக்கவேண்டுமென்பதே எமது விருப்பமாகும். "குடும்பஜீவியமென்றால் பெண்ணை விலைக்கு வாங்கியது போல் இரவல் நகைகளைக் கொண்டு வாங்குவதும், பின்னால் அவளை பரிதாப நிலைமைக்கு விடுவது மல்லவே.

இது முதலாய் அவ்வளவு கொடூரமெனக் கூறிவிட முடியாது. இப்பெண் தனது குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்த கொஞ்ச நாளைக்குள், வீட்டிலுள்ள மாமனார், மாமியார், நாத்திமார் யாவரும் இவள் பேரில் குற்றங் கண்டுபிடிக்க ஆரம்பித்து விடுகின்றனர். இவள் அந்த வீட்டிற்கு ஓர் அடிமையொப்ப பாவிக்கப்படுகின்றாள். எடுத்த விஷத்திலும், இப் பெண்ணின் மீது குற்றங் கண்டு, சிறிய விஷயங்களைப் பெரியதாக்கி புருஷனுடன் சொல்லுவதும், அவனுக்கு அதிக கோபத்தையுண்டாக்குவதும் சகஜமாகி விடுகிறது. இதனால், புருஷன் மனைவியை இம்சிக்க ஆரம்பித்து விடுகிறான். பின் இதுவே அந்த வீட்டின் தினசரி நடபடிக்கையாக மாறி விடுகின்றது. அப்பெண் மிகுந்த நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிவிடுகிறாள். மிகுந்த துக்கம் அவளைப் புடைசூழ, அவளின் வாழ்க்கை இன்பமாக இருக்க வேண்டியிருப்பதற்குப் பதிலாய்; துன்பமாக மாறி விடுகிறது. அப்பெண்ணும், அவள் புருடனும் தனிக்குடித்தனம் செய்வார்களாயின் இவ்வளவு துன்பத்திற்கு அவள் ஆளாகும்படி நேரிடவேமாட்டாதென்பது உண்மை.

இக்குடும்பத்தில், இப்பெண் ஒருவளை மட்டும் மற்றவர்கள் யாவரும், திட்டுவதும், உதைப்பதும், நிஷ்டூரமாகப் பேசுவதும் தொழிலாகப் போய்விடவே, இப்பெண், இக்கஷ்டங்களைத் தாங்கமாட்டாமல் அநேக தடவைகளில் பட்டினியாகக் கிடக்கின்றாள். அவளுடைய தேகவலிமை, துக்கத்தாலும், பட்டினியாலும் குன்றிவிட, அவள் மூலமாகப் பிறக்கும் குழந்தைகளும் பலவீனமாகவே இருக்கிறதை நாம் காண்கிறோம். இவள் தன் குறைகளைப் பிறரிடம் கூறி ஆற்றிக்கொள்ள எவரும் அந்த வீட்டில் இடங்கொடுப்பதில்லை. இவள் பட்டினியாயிருந்தாலும் சாப்பிடச் சொல்லி உபசரிப்பதும் அந்த வீட்டில் கிடையாது. ஓர் வேளை ஆகாரம் கொடுக்கப்பட்டாலும், அது எல்லோரும் சாப்பிட்ட பின் மீதியுள்ளதாகவேயிருக்கும். இம்மாதிரியான பல காரணங்களால், பெண்களின் உடல் வலிமை, மனோ வலிமை, அழகின் பயன் யாவும் குன்றி விடுகின்றது. இந்தியாவில் பெண்கள் பொதுவாகப் பலஹீனர்களாயிருப்பதற்கு இதுவே காரணமாகும்.

இன்னும் அநேக குடும்பங்களில், புருஷன் தனக்கு வேண்டியதை விலை கொடுத்து கடையினின்று பெற்றுக் கொள்ளுகிறான். ஆனால், தன்னைப்போலவே, சரீரம் படைக்கப் பெற்றுள்ளவளும், தன் அன்புக்குப் பாத்திரப்பட்டவளுமாகிய மனைவியையோ மறந்து விடுகிறான். தான் மாத்திரம் நல்ல பக்ஷணவகைகளையும், தின்பண்டங்களையும் வாங்கிப்புசிக்க வேண்டுமென்றும், தன் மனைவியை இவ்விஷயத்தில் அலக்ஷியம் செய்து விட வேண்டுமென்றும் எந்த சட்டத்திலாவது கூறியிருக்கின்றதா?

இந்து மதமானது அநேக தர்மசித்தாந்தங்களை தன்னுள் அடக்கப் பெற்றிருக்கின்றதென முன்னமே கூறியிருக்கிறேன். உயிர்களைக்கொல்லக்கூடாது. எந்த ஜீவனுக்கும் இரங்கவேண்டும். மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிர் போல் நேசிக்கவேண்டும் என இந்து மதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இதன்படியே நடக்கவேண்டுமெனப் பெரியோரும் கூறுகின்றனர். எனினும் அம்மதத்தைச் சார்ந்த பெண்மணிகளின் நிலைமை எவ்வாறிருக்கின்றது என்பதை எல்லோரும் சிந்திக்கவேண்டாமாவென்று கேட்கிறோம். பெண்கள் வாழ்வின் நிலைமை முற்றிலும் மாறுதலடைந்து சுபீக்ஷதசையடைந்தாலன்றி இந்நாடு க்ஷேமமடையாதென்பது திண்ணம்.

குழந்தைகளின் க்ஷேமம் தாய்மார்களின் நலனையே பொறுத்திருக்கிறது என்பதை யாவரும் அறிவார்களென எண்ணுகிறேன். நான் மேலே கூறியபடி உள்ள நிலைமையில் ஓர் பெண் சுகமானதும், பலமானதுமான குழந்தையைப் பெற்றெடுக்கக் கூடுமாவென்பதை வாசகர்களே சிந்திக்கவேண்டும். அவள் சந்தோஷமாயும், பலமுள்ளவளாயும் இருந்தால் பிறக்கும் குழந்தையும் ஆரோக்கியமுள்ளதாய், புஷ்டியுள்ளதாய் இருக்கும். இந்தியாவில் பிறக்கும் பிள்ளைகள் பொதுவாக, நாளடைவில் அல்ப ஆயுளுடன் மறைந்து போவதற்கு இதுவுமொரு காரணமாகும்.

ஓர் தேசத்தில், ஆண்களுக்கு மட்டுஞ் சுதந்தரமும், பெண்களுக்கு அடிமை வாழ்வும் இருக்குமாயின், அந்த நாடு முன்னே

ற்றமடைந்ததெனக் கூறமுடியாது. அதை பாதி சுதந்தரமெனப் பெயர் வைத்தும் அழைக்க முடியாது. மனிதனுக்கு தேச விஷயத்திலோ, குடும்ப விஷயத்திலோ, அரசியலிலோ, அல்லது மற்றும் எந்தத்துறையிலாகட்டும் எவ்வளவு சுதந்தரமிருக்கின்றதோ, அவ்வளவு பெண்களுக்கும் இருக்கவேண்டுமென்பதே எனது திடமான அபிப்ராயம், என் அபிப்ராயத்துடன், ஏனையோர் ஒன்றுபடவேண்டுமாயின், நான் கூறும் காரணங்களை மேற்போக்காகக் கவனியாமல், ஆழ்ந்து யோசிப்பார்களானால், நான் சொல்லுவது நியாயம் என்னும் முடிவுக்கே வருவார்கள்.

இன்னும் சிலர் சில காரணங்களைக் கூறலாம். அதாவது, நான் கூறியுள்ளபடி பெண்களுக்குச் சுயேச்சை கொடுத்துவிட்டால் அவர்களில் சிலர் கெட்டுப்போய் விடமாட்டார்களா என்பது.

"தப்பிதம் செய்தல்" என்பதை இந்த இடத்தில் கொண்டு வரவேண்டிய அவசியமில்லையென்றே எண்ணுகிறேன். ஆண்களில் நல்லவர்களும் கெட்டவர்களுமிருப்பது போலவேதான், பெண்களிலுமிருக்கின்றார்கள். ஏதோ சில பெண்கள் வழிதவறிக் கெட்டுப்போகின்றார்களென்பது உண்மையே. இங்ஙனம் இவர்கள் கெட்டுப்போவதற்கு முக்கிய காரணம் ஆண்களாகவேயிருப்பார்கள். சமத்வம் என்னும் அருமையான சாதனத்தைப் பெண்களுக்கு அளித்துப் பாருங்கள். அவர்கள் வெகு மேன்மையுடன் வாழ்ந்து வருவார்கள். வேறு சிலர், சில காரணங்களைக் கூறலாம். அவைகளில் பிரதானமானது, "நாம் நம் முன்னோர்கள் கொண்ட கொள்கைப்படி நடக்க வேண்டுமேயல்லாது. இன்றைக்கு புதிதாக எதையும் செய்யக்கூடாது" என்பதேயாகும். இப்போது நாமிருக்கும் காலத்திற்கும், நமது முன்னோர்கள் வாழ்ந்திருந்த காலத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் கொள்ளவேண்டும். நமது முன்னோர்களின் வாழ்க்கையை, இம்மாதிரி விஷயத்திற்குத்தான் கொண்டு வந்திருக்கிறோமேயல்லாது, அவர்கள் செய்யாத பல காரியங்களை இப்போது நாம் செய்ய வில்லையா? ஆகையால், காலமாறுபாடுகளை அநுசரித்து, உலகின் போக்கையும் கவனித்து நாம் செய்யவேண்டியது என்னவோ அவைகளைச் செய்தே தீரவேண்டும்.

பெண்மணிகள் இவ்விதம் நிர்ப்பந்திக்கப்படுவதை இந்த நாட்டில் கல்வியாளர்களும், தலைவர்களும், மதாபிமானப் பெரியோர்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பெண்கள் விடுதலைக்கென்று உழைக்க இவர்கள் யாவரும் ஒருமனப்பட்டு முன்னணிக்கு வருவார்களானால், பெருத்த புண்ணியத்தை இவர்கள் அடையக்கூடும். கடவுள் நம்மீதும், நம்தேசத்தின்மீதும் இரக்கம் பாராட்ட வேண்டுமானால், பெண்களின் விடுதலைக்கென யாவரும் உழைப்போமாக.

பக்தாராம்.

## பாட்னாவிற்குப் பின்.

பாட்னாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குப்பின், மௌலானா மகமது அலி, தமது "காம்ரேட்" பத்திரிக்கையில் எழுதியதில் சில பாகங்களை மட்டும் கீழே வெளியிடுகிறோம்:—

சுயராஜ்யக் கட்சியார் எல்லா வகையிலும் தாங்கள் ஏற்றுக் கொண்டதை செய்து முடிக்கவில்லை. புதிதாய் பெல்காமில் தீர்மானித்த நூற்சந்தா திட்டம் ஒழுங்காய் நிறைவேறுவதற்கு அவர்கள் வாக்குறுதிப்படி மனப்பூர்வமாய் உழைக்கக் கடமைப்பட்டிருந்தார்கள். எனவே, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் அவசியமில்லை. தேசபந்து இருந்தால் நூற்சந்தாவை இவ்வருஷத்துக் குள்ளே மாற்ற இடங்கொடுத்திருக்கமாட்டார். கதரையும், ராட்டினத்தையும் கண்டால் வெருளும் "மகாராஷ்டிர கோஷ்டி"யையும் அவர் லட்சியஞ் செய்திருக்கமாட்டார். இவ்வளவுக்கும் தேவையான கதர் துணி கிடைக்காவிடில் தாமும், தம்மைச் சேர்ந்தவர்களும் கோணித் துணியையாவது அணிந்து கொள்வதாக 1921-ம் ஆண்டில் ஸ்ரீமான். கேல்கர் வீரம் பேசினார்!

ஆனால், தேசபந்து ஒன்று நினைக்க அவருக்குப் பின் வந்தவர்கள் வேறு வகையில் நினைத்தார்கள்.

### கேவலமான அகம்பாவம்.

பண்டித நேருவுடையவும், அவருடைய கட்சியுடையவும் நன்றியெல்லாம் வழிந்தோடிவிட்டது. பாட்னாவில் உபசாரமாய்க்கூட ஒரு வார்த்தையாவது அவர் உரைக்கவில்லை. டாக்டர் பட்டாபி சீதாராம ஐயர் மதியீனமாய் ஸ்வராஜ்யக் கட்சிமீது வீண் அபவாதம் ஒன்று சுமத்தியபோது பண்டித நேரு நடந்து கொண்ட பான்மை மிகவும் கேவலமாய் இருந்தது. குரூரமாயும், அகம்பாவத்துடனும் அவர் நடந்து கொண்டார். மகாத்மாஜி கூறிய அரிய புத்திமதியைக்கூட கவனித்தாரில்லை. அவர் நடந்து கொண்ட விதத்திலிருந்து மகாத்மாஜியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு காங்கிரசை சுயராஜ்யக் கட்சியாரிடம் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டுக் கொடுத்து கடைசியில் முழுதும் ஒப்படைக்கத் தயாராயிருந்த மாறுதல் வேண்டாதவர்களிடத்தும், மகாத்மாஜீயிடத்தும் கொஞ்சமேனும் அவர் நன்றியறிதல் பாராட்டினாரா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கது. இந்த சந்தேகம் மறுநாள் அவர் சுயராஜ்யக் கட்சிக் கூட்டத்தில் பேசியதிலிருந்து நிவர்த்தியாயிற்று. சுயராஜ்யக் கட்சியின் அரிய வேலைகளைப் பாராட்டியதோடு நில்லாமல், சுயராஜ்யக் கட்சியாரிடம்தான் தேசம் நம்பிக்கை வைத்திருப்பதாயும், மாறுதல் வேண்டாதார் அந்நம்பிக்கையை இழந்து விட்டதாயும் சொல்லிக் கொண்டார். நூற்பவர் சங்கம் ஸ்தாபித்த பின் மாறுதல் வேண்டாதவர்களில் எவ்வளவுபேர் சட்ட சபைகளில் அரசியல் வேலை செய்யத் தயாராயிருக்கிறார்களென்று கவனிக்க வேண்டுமென்றார் இப்பொழுது காங்கிரஸ் ஒருவித நிபந்தனையுமின்றி சுயராஜ்யக் கட்சியின் வேலைத் திட்டத்தை அங்கீகரித்து விட்டதுபற்றி தாங்கள் பெருமை பாராட்டிக் கொள்ளலாமென்று தற்புகழ்ச்சி கொண்டார். மகாத்மாஜியும், மாறுதல் வேண்டாதவர்களும் தாமாகவே தங்களுடைய தாராள நோக்கத்தால் விட்டுக் கொடுத்திருக்க, அதற்கு ஒரு நன்றியும் காட்டாமல் "யார் பெரியவன்" என்று வீரம் பேசும் பான்மையில் தாங்கள்தான் தேசத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் எனப் பண்டித நேரு பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார். ஆனாலோ மாறுதல் வேண்டாதவர்கள் ஒற்றுமையை நாடி, இந்த ஒரு வருஷமாய் தேசத்தில் செல்வாக்கு யாருக்கு அதிகம் என்ற விஷயமாக ஸ்வராஜ்யக் கட்சியுடன் வாதப்போர் செய்வதையே நிறுத்தி ஒழித்திருக்கின்றனர். எனக்கு இந்தச் சண்டையைப் பற்றிய பழைய குப்பைகளைக் கிளற இஷ்டமில்லை. ஆனால் பண்டிதநேருவின் பேச்சினால் சில விஷயங்களை வெளியிட வேண்டியிருக்கிறது.

### இவர்கள் சாதித்தது.

சுயராஜ்யக் கக்ஷியார் சாதித்ததைப் பற்றி கூறவும் வேண்டுமோ? சட்டசபையில் புகுந்தபோது இருந்த நிலைமையினின்றும் வழுவி, இன்று மிதவாதிகளுடன் உறவாடி அவர்களுக்கும் இவர்களுக்கும் பேதமில்லாத தன்மையை அடைந்து விட்டார்கள். தங்கள் கோரிக்கைகளை மிகவும் குறைத்துக்கொண்டு விட்டதாக எலம் கூவுகிறவர்களைப் போல் பறைசாற்றி, சுயேச்சைக்கட்சியினர் சிலருடையவும், மிதவாதிகள் சிலருடையவும் உதவியைச் சம்பாதித்துக் கொண்டார்கள். ஒன்றரை வருஷத்துக்கு முன் வரவு செலவு திட்டத்தை அவர்கள் டில்லியில் நிராகரித்தபோது அடைந்த வெற்றியையும் இப்பொழுது சிம்லாவில் பெற்ற ஜயத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பின்னது தோல்வியென்றே கூற வேண்டும். அதை ஒரு வெற்றி எனக்கருதியபோதிலும் "இனிமேல்" என்ன செய்யப்போகிறார்கள்? என ஜனங்கள் வினவுகிறார்கள். ராஜிநாமா செய்யப்போவதாய் சுயேச்சை கக்ஷியுடன் சேர்ந்து இவர்கள் செய்த "நடபுடலு"க்குப்பின், சுயராஜ்யக்கக்ஷியார் மனதைக் கவரத்தக்கவாறு வீரதன்மையான செயல்கள் ஒன்றும் செய்து விடுவார்கள் என்று தேச மக்கள் நம்பமாட்டார்கள். அடுத்த தேர்தல்களைப் பற்றியே அதிக கவனஞ்செலுத்தி, சுயராஜ்யகக்ஷியார் மிகவும் பேசிவருவதனின்றும், இப்பொழுது இவர்களால் ஒன்றும் ஆகாது என்று விளங்குகிறது. உண்மையில் இந்திய ஜன சமூக வாழ்க்கையை தாக்காமல், மேலாந்த வாரியாய் பிரசங்கங்கள் நிகழ்த்துவதைக்கண்டு சந்தோஷிக்கும் "படித்த மக்களுக்கு"க்கூட இது திருப்தியையளிக்காது. பொது ஜனங்களைப் பற்றியவரையில் சுயராஜியக்கக்ஷி என ஒன்றிருப்பதாகவே அவர்களுக்குத் தெரியாது. காங்கிரஸுக்கு வெளியில் இக்கக்ஷியார் சாதித்ததைப் பற்றி இவ்வளவு போதும்.

### காங்கிரசும் சுயராஜ்யக் கட்சியும்.

"யார் பெரிய கக்ஷி" என்பதை நிரூபிக்க காங்கிரஸில் பிளவு ஏற்பட்டால் இருமுறை டெல்லியிலும், காக்கினாடாவிலும் நான் தடுத்தேன். காக்கினாடாவில் ஓட் எடுத்திருந்தால் மாறுதல் வேண்டாதவர்

5 பேருக்கு சுயராஜ்யவாதி 2-பேர் தான் இருந்திருப்பார்கள் என்பது நிச்சயம். சுயராஜ்யக் கக்ஷி தோல்வியுற்றிருக்கும்; டில்லியிலும், வங்காளத்திலுமிருந்து ஏராளமான பிரதிநிதிகளை சுயராஜ்யக் கக்ஷியார் கொண்டு வந்திருந்தபோதிலும்—ஓட் எடுத்திருந்தால, அக்கக்ஷியார் சிறுபான்மையோராய்த் தான் இருந்திருப்பார்கள். ஆனால் இரண்டு இடத்திலும் நான் பிளவு ஏற்படாமலிருக்க ஓட் எடுக்க வேண்டாமென த் தடுத்தேன். மகாத்மாஜியும் விடுதலை பெற்றது முதல் சுயராஜ்யக் கட்சியுடன் சண்டையிடாமல், மாறுதல் வேண்டாதவர்களை ஒரு நிபந்தனையுமின்றி விட்டுக்கொடுத்துக் கொண்டே வரும்படி செய்தார். சுயராஜ்யக் கட்சிக்கு விரோதமாய் ஒரு கட்சியை அமைக்க ஒரு பிரயத்தனமும் நாங்கள் செய்யவில்லை. அப்படியிருந்தும பாட்னாவில் வந்திருந்தவர்களின் தொகையைப் பிரித்துப் பார்த்தால் சுயராஜ்யக் கட்சியார் தாங்கள் தான் பெருமிதமானவர் என்று பீத்திக்கொள்ள இடமில்லை என விளங்கியிருக்கும்.

ஆனால், ஒரு வார்த்தை மட்டும் நான் கூற விரும்புகிறேன். மாறுதல் வேண்டாதவர் இந்தப் பயனற்ற சட்டசபைத் திட்டத்தை ஆதரிக்கவில்லை என்று வற்புறுத்த வேண்டும். மகாதமாஜி பாட்னாவில் சுயராஜ்யக் கட்சியிடம் காங்கிரஸை ஒப்படைத்து விட்டால், அத்துடன் மாறுதல் வேண்டாதவரும், தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் அக்கட்சியின் திட்டத்துக்கு அடிமைப்பட்டு விடவில்லை. நாங்களும், தமது திட்டத்தையும் முறைகளையும் ஆதரிப்பதாய் பண்டித நேரு நினைத்தால், அது பெருந் தவறாகும். அந்த வேலையில் எங்களை அவருடன் சேர்த்துக் கொண்டுபோக அவரால் முடியாது. அப்படி அவர் கோரினால் நாங்கள் பிரிந்துவிட வேண்டியதுதான். என்னைப்பற்றிய வரையில், இப்பொழுதே அத்தகைய முறைகளிலிருந்து நான் விலகி விட்டதாய் பகிரங்கமாய்ச் சாற்றுகிறேன். பாட்னாவில் நானும், மகாத்மாஜியும், எங்கள் பெரிய அண்ணாவும் செய்ததைப்பற்றி பிறகு ஒரு முறை எழுதுகிறேன். ஆனால் நூற் சந்தாவிற்கு செவ்வையாய் வாக்குத் தந்து, அதன் மேல் சட்டசபை வேலைக்கு காங்கிரஸின் செல்வாக்கைப் பெற்ற சுயராஜ்யத் தலைவர், சுயராஜ்யக் கட்சியார் தங்களுடைய பாகத்தை திருப்திகரமாய் நிறைவேற்றவில்லை என்று தேசபந்து தாஸரே ஒப்புக்கொண்டபின், இவ்வாறு பேசுவதற்கு மிகுந்த "தைரியம்" கொண்டிருக்க வேண்டியது தான்.

---

சைவபரிபாலன சபை, சென்னை

## திருவாசகப் பதிப்பு

---

சென்னையில் பல பாகங்களிலுள்ள சைவ சபைகளின் பிரதிநிதிகளடங்கிய "சைவபரிபாலனசபை" எனப் பெரிய பொதுச்சபை யொன்று ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடை பெற்று வருகிறது. இச்சபையார் சென்னையிலும், அதற்கணித்தாயுள்ள ஊர்களிலும், ஏழைகள் வசிக்கும் இடங்களிலும் சென்று, சமய சம்பந்தமான உபந்நியாசங்கள் செய்து மக்களை நல்வழிப்படுத்தி வருகிறார்கள்.

கிறிஸ்து மதத்தினர் தங்கள் வேதமாகிய பைபிலை (Bible) பல்லாயிரக்கணக்காக அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுத்து அதை எங்கும் பரவச்செய்கிறார்கள். சைவ சமயிகள் தங்கள் தமிழ் வேதத்தை அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடாததினாலேயே சைவசமய உண்மைகள் ஏழைமக்கள் வசிக்குமிடங்களில் பரவாமலிருக்கின்றன. அவ்வுண்மை யுணர்ந்த பல அன்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிச் சைவ பரிபாலன சபையார் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த தமிழ் வேதமாகிய திருவாசகத்தைப் பதினாயிரங் காபிகள் நல்ல காகிதத்தில் சுத்தப் பதிப்பாக அழகு பெற அச்சிட்டு இலாபங் கருதாது புத்தகம் ஒன்று அசல் விலை இரண்டணாவிற்குக் கொடுக்கத் தீர்மானித்துள்ளார்கள். 10,000- காப்பிகள் அச்சிட சுமார் ரூ. 1500 வேண்டியதாயிருக்கிறது. முன் பணமிட்டு அச்சிடசபையில் மூலதனம் கிடையாததலால், சமயாபிமான முள்ள 150 அன்பர்கள் ஒவ்வொருவரும் ரூ. 10- முன்பணம் அனுப்புவார்களாயின், புத்தகம் அச்சிட்டு முடிந்தவுடன் பத்து ரூபாய் அனுப்பியவர்கட்கு 80 புத்தகங்கள் அனுப்பப்படும். அவ்வெண்பது புத்தகங்களையும் அவ்வவ்விடங்களில் புத்தகம் ஒன்று இரண்டணாவிற்கு விற்றுப் பரவச் செய்து நஷ்டமடையாமலிருக்கலாம்; அல்லது தானமாகக் கொடுத்துப் புண்ணியம் பெறலாம். ஒரு புத்தகம் வேண்டிய வெளியூர் அன்பர்கள் 4 அணா தபால் முத்திரை முன்னதாக அனுப்பவேண்டும் இப்புண்ணியச் செயலுக்குச் சமயாபிமானமுள்ள செல்வர்கள் எவரேனும் நன்கொடையளிப்பின் அன்போடு ஏற்றுக்கொண்டு அவர்கள் பெயரைப் புத்தகத்தில் பதிக்கப்படும். விரைவில் அச்சிட்டுப் பூர்த்திசெய்ய எண்ணியிருப்பதால் முன்பணம் அனுப்புவோர், சென்னைக் கோமளீஸ்வரன் பேட்டை "லோகோபகாரி" பத்திராசிரியரும், சைவ பரிபாலன சபை உப தலைவருமாகிய பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் விலாசத்திற்கு அனுப்பவேண்டும் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

---

## துடுப்பதி பொதுக்கூட்டம்.

துடுப்பதி கரிவரதப்பெருமாள் ஆலயத்தில் 16-10-25 தேதி மாலை ஓர் பொதுக்கூட்டம் நடை பெற்றது. அக்கூட்டத்திற்கென்றே அழைக்கப்பட்டிருந்த கோவை ஸ்ரீமான்கள் N. லக்ஷ்மண முதலியார் அனந்தபத்மநாப அய்யர் S. A. கணேசன் முதலியோர்கள் பெருந்துறையிலிருந்து வந்திருந்தனர். ஸ்ரீமான் N. லக்ஷ்மண முதலியார் அக்கிராசனம் வகித்தார். கதர் என்ற விஷயத்தைப் பற்றி அனந்தபத்மநாப அய்யர், K. ராமய்யர் இவர்கள் சிறிது நேரம் பேசியபின் ஸ்ரீமான் S. A. கணேசன் செங்குந்தர்களுக்கும் கதரயிலிருத்திக்கும் உள்ள சம்மந்தத்தை நீண்ட நேரம் பேசினார். கடைசியாக அக்கிராசனர் செங்குந்தருக்கும் மகாத்மாவுக்கும் புதுப்பாளையத்தில் நடந்த சம்பவத்தை கூறி செங்குந்தர் கதரை ஆதரிக்க வேண்டிய அவசியத்தையும் தமது முடிவுரையில குறிப்பிட்டார். கடைசியாக ஸ்ரீமான். டி. ஜி வெங்கிடாசலம் எல்லோருக்கும் வந்தனங்கூற இரவு 9 மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது. அவ்வூர் முக்யஸ்தர்கள் சிலர் கதர் கட்டுவதாக ஒப்புக்கொண்டனர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## கதரினால் அடைந்த மேன்மை.

(ஜக்கார்பாளையம் ஸ்ரீ. பி. ஆர். சின்ன கிருஷ்ணசாமி எழுதியது.)

---

சுமார் 2-வருஷங்களுக்கு முன்பு நான் கதரைப் பற்றியாவது காங்கிரஸைப் பற்றியாவது, ஆங்கிலேயர்களைப் பற்றியாவது, அவர்கள் நம் தேசத்தை அரசாட்சி செய்யும் நோக்கத்தைப் பற்றியாவது முடிவில் ஒன்றுந் தெரிந்து கொள்ளாதவனாயிருந்தேன். அச்சமயம் 2, 3, கிராமங்களுக்கு ஒருவர்தான் அபூர்வமாய் கதர் உடுத்திக் கொண்டிருப்பார். அவ்விதம் கதர் உடுத்துகிறவர்களைப்பற்றி சிறுபான்மையோர் பெருமையாகவும், பெரும்பான்மையோர் சிறுமையாகவும் பேசிவந்தார்கள். அச்சிறுபான்மையோரிடமே என் மனது சென்றது. என்னையும் கதர் வாங்கி உடுத்தும்படி என் மனந்தூண்டிற்று. கிராமங்களில் கதர் கிடையாமல் போனதால் என் மனத்தின்படி நடக்க முடியவில்லை. கதர் உடைதரித்தவரைக் கண்டவுடன் அவர்களிடத்தில் பிரீதியும், அவர்களை நெருங்குவதற்கு நாணமாயும் இருந்தது. 2, 3 மாதகாலம் கதர் வாங்காமலே இருந்தேன். அப்பால் மில் வேஷ்டிகளை உடுத்த எனக்குச் சகிக்கவில்லை. திருப்பூர் போய் கதர்வாங்கி, உடுத்திக் கொண்டேன். நான் கதர் உடுத்தியிருப்பதைப் பார்த்த, எனது நண்பர்களும் என்னை ஏளனம் செய்யச் செய்யக் கதரின் உண்மையைக் கொஞ்சம் நான் அறிந்து கொண்டதினால், ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள் என்ற மாதிரி எனக்கு கதரின் பேரில் அதிகப் பற்றுண்டாயிற்று.

இன்னும் கதரின் முழு உண்மையையும் காந்தியடிகளின் நோக்கங்களையும், தெளிவாய்த் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் என்னைத் தூண்டியதால் சில நண்பர்களைக் கொண்டு ஒரு வாசகசாலை ஏற்படுத்தி, அதன் மூலமாய் சில விஷயங்களெல்லாம் தெரிந்து கொண்டேன்.

பிறகு, மகாத்மாஜியவர்கள் ஆமதாபத்தில் நூல் சந்தா திட்டம் ஏற்படுத்தியதும், உடனே, சில நண்பர்கள் புதிய இராட்டைகளைச் சேர்த்தி, நூல் நூற்றுப் பழகினோம். நான் நூற்றுப்பழகின நாள் தொட்டு எனக்கு வேண்டியமேல் வேஷ்டிகளுக்கு, நானும் என் குடும்பத்தாரும், நூற்ற நூலையே தரிக்குக் கொடுத்து நெய்து கொள்கிறேன்.

---

## விவேஷ கவனிப்பு.

அபிநவ
ஆங்கில போதினி.

இங்கிலீஷ் படிக்கவில்லையே என்ற கவலைவேண்டாம். தங்கள் சொந்த ஜோலிகளுக்கிடையூறின்றி பொது ஜனங்கள் யாவரும் இங்கிலீஷ் பாஷையில் ஆட் பெயர், ஊர்ப் பெயர் முதலியவைகளையும் சகல விதமான தந்தி விஷயங்களையும், லெட்டர்கள் மேல் விலாசங்கள் எழுதும் விதங்களையும், இங்கிலீஷ் இலக்கணத்தின் முக்கியாம்சங்களையும் அதி சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளக்கூடியதும், அனுபோகத்தில் பிரயோஜனமுள்ளதென்று பொதுஜனங்களால் போற்றப்படுகிற புஸ்தகமிதுவே. சென்ற 12 வருஷங்களாய் ஆயிரக்கணக்கான புஸ்தகங்கள் செலவாய் இப்பொழுது 10-வது தடவை மறுபடியும் அச்சிட்டிருக்கிறோம். புஸ்தகம் 1-க்கு விலை அணு **0—12—0** வி. பி. சார்ஜ் அணு **4.**

V. S. K. சுவாமி அன்ஸன்ஸ்.
புக்ஸெல்லர்ஸ், விளாத்தி குளம்
Via. கோயில் பட்டி S. I. R.



# TO LET.



இனும்! உயர்ந்த பெரிய டேபில் கெடியாரம் இனும்!!
தி "வேம்லி" ரிஜிஸ்டர் செய்த உயர்ந்த
பொன் நிப்புள்ள பவுண்டன்
பேனு 1-க்கு ரூ 3-8-0



**நமது கிங் ஜார்ஜ் இளவரசரால் பரிசோதிக்கப்பட்டது.**

500 நற்சாக்ஷி பத்திரங்கள் கொண்டது! இந்த பவுண்டன் பேனு ஆல்கனைட் உறையுள்ளதும், 14 காரட் (கோல்ட்) நிப்புள்ளதும், எழுத்துவேலைகள் சுரு சுருப்பாய் எழுதுவதற்கும் நெடுநாள் வரை உழைக்கக்கூடியதும் உயர்ந்த நிக்கல் கிளிப்புடன் பார்வைக்கு அதிக கெம்பீரமாயும், ரூபாய் 10 மதிப்பிடக்கூடியது, இப்பேனுவைப்போல் இதுவரையில் கண்டு இருக்கமாட்டீர்கள் எனக்கருதவும். மேற்படி பேனு 1-க்கு ரூபா 3-8-0க்கு வாங்குவோர்க்கு பெரிய டேபில் டைம்பீஸ் இலவசமாய் தரப்படும். இரண்டு பேனு ரூ. 7-க்கு வாங்குவோருக்கு 18 காரட் ரோல்டு கோல்டு பூவேலை செதுக்கிய உன்னத பாக்கட் கெடியாரம் இலவசமாய் தரப்படும். ஷை டேபில் டயம்பீஸ் தனிவிலை ரூ. 4-8-0 ஷை பாக்கட் கெடியாரம் தனியாய்விலை ரூ. 8-8-0. கெடியாரங்களுக்கு 5 வருஷம் காரண்டியுடன் அனுப்பிக்கப்படும். தருவித்து திருப்தியில்லாதவர்கள் திருப்பியனுப்பி தங்கள் பணத்தை வாப்பீஸ் பெறலாம்.

ஓ. எம். வி. கம்பெனி,
(23-பிட்) மதராஸ். கு



## "தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது
விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13. வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.



**28** வருடங்களாய் உலகப்பிரசித்திபெற்ற
வைத்யரத்ன பண்டிட்

## D. கோபாலாசார்லு அவர்களின்

திவ்ய அவுஷதங்கள்.

காலரு அவுஷதங்கள் ப்ளேக் அவுஷதங்கள்
ஒரு முறை உபயோகிததால் விஷபேதியும், ப்ளேக்கும் பறந்தோடும்

ஜீவாம்ருதம்.

தேகபலம், மனோசக்தி, இந்த்ரிய புஷ்டியைக் கொடுத்து தேக வளிவை யளிக்கும். விலை ரூ. 3—4—0

ப்ருகுவடி.

எக்காரணத்திலுண்டான தாது நஷ்டத்தையும், மேகவெட்டை முதலிய கொடூர வியாதிகளை அறவே யொழிக்கும்.

புட்டி 1க்கு ரூபாய் 2—0—0

ஸித்தமகரத்வஜ.

நபும்சகத்தை வேருடன் துலைத்து இந்திரிய புஷ்டி கொடுத்து வஜ்ரதேகிகளாகச் செய்யும்.

## ஆயுர்வேதாஸ்ரமம்.

கோவிந்தப்ப நாய்க்கன் தெரு.
காந்திநகர், மதராஸ்,



வெள்ளியை கொடுத்து தங்கத்தைப்
பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற
லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்ச
மானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக்
கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை காஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரைய ஜாப்தாவுக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

உண்மையான  கெட்டி

கதர். யானகதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேர்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் கடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மூ. தங்கப்பெருமாள், காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி

ந. ராமசாமி

மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம், திருப்பூர்

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் ரொசவ அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,

ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம் (தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மூ. தங்கப்பெருமாள்,

காரியதரிசி கத்தர், இலாகா.

## ஸ்தம்பனவடி.

இந்திரியஸ்கலிதத்திற்கு 3 நாளில் குணம் கொடுத்து தேகத்துக்கு பலத்தையும் ஜீரணசக்தியையும் தாது புஷ்டியையும் உண்டு பண்ணும்.

25 மாத்திரை ரூ. 2—0—0

Vydiapathy Kotta Jayaram Naidu,
Andra Ayurvedic Pharmacy Ltd,
159, Broadway, Madras.

கலியுகத்தில் "ஓர் மகானின் மகிமை"
மகத்துவமுள்ள மகானால் கலியுக கற்பகமாக
விளங்கும்,

"அருமையான மூலிகையும்"
"தாயத் என்னும் ரட்சையும்"

(எந்த மதஸ்தர்களும் உபயோகிக்கத் தக்கவை.)

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, ஆண் பெண் இருதாரத்தார்களுக்கும் உண்டாகும் பலவித நோய்களும், பார்வை, தோஷங்களும், பலவித குஷ்டம், க்ஷயம், வலிப்பு, இளைப்பு, பிர்மை, பைத்தியம், வாத நோய்கள், மேகசம்பந்த வியாதிகள், விஷத்தால் ஏற்படும் பலவித வியாதிகள் முதல் தீராதென்றெண்ணி சகலவிதமான வியாதிகளும், செய்வினைகளும் கவலைகளும் ஆச்சரியமாகும்படி பூரணகுணமாகியிருப்பதையும்,

நீண்டநாளாக புத்திரபாக்கியமில்லாதிருந்த அனேகருக்கு புத்திரபாக்கியம் உண்டாயிருப்பதையும்,

அபாரமான காரியங்களெல்லாம் வெற்றியடைந்திருப்பதையும் ஸ்பெஷல் தாயத் என்னும் (ரட்சைகளால்) கவலைகள் நீங்கி, ஒவ்வொருக்கும் கோரிய காரியங்கள் நிறைவேறியிருப்பதையும்,

இந்த நிமிஷமே பார்க்கலாம்.

ஏராளமான சகலதேசத்தார்களின் நற்சாட்சிகளாலும் காணலாம். தமிழ்வைத்திய சங்கத்தில்

தங்கமெடலும், நற்சாக்ஷியும் பெற்றவை.

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

கவனியுங்கள்!!

இந்த சமயத்தை கைவிடாதீர்கள். இதுவே நல்ல காலமாகும். வேண்டியவர்கள் உங்கள் முழுவிலாசத்தோடு எதற்காக தேவையிருந்தபோதிலும் ஆரம்ப முதல் சரிவர விபரமெழுதி, பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து கோயமுத்தூர்ஜில்லா மேட்டுப்பாளையம் "பாலசந்திரன் ஆபீஸ்" தலைவர் ஸ்ரீமான் எஸ். ஏ. கே. பிள்ளை அவர்களுக்கு எழுதிக்கொள்வீர்களானால் விபரமான பதிலும், சகல விபரமும் அனுபந்தங்களும் கிடைக்கும்.

எவ்வித வியாதிகளுக்கும் பத்தியமில்லை.

☞ எந்த தேசத்திய ஸ்டாம்புகளும் அனுப்பலாம்

# இம்ப்ரூவ்ட் லீவர்

## பாக்கெட் கெடியாரங்கள்.

ஓவர்வண்ட் பாக்கெட் கெடியாரம் நிக்கில் கூடு, தம்பு தூசி நுழையக்கூடாத மூடியுள்ளது. பிரத்யேகமாய் தருவித்த உயர்ந்த திக்கு கண்ணாடியுள்ளது. 6 லீவர்களுள்ளது. அழகான பெட்டியுடன் ஒரு சங்கிலியும் விலை ரூ. 8—12—0.

பெஸ்ட் பேடண்டு லீவர் வாட்ச விலை ரூ. 4—12—0

(Fido) பிடோ லீவர் கெடிகாரம் சிறிய ரூபம், மிக்க உறுதியானது, அழகுள்ள நிக்கல் கேஸில் அமைந்தது. நேர்த்தியான உறுதியுள்ள அமைப்புள்ளது. உத்திரவாதமுள்ள, டெஸ்ட்டு செய்த எங்கள் சாமான்களை வாங்குங்கள். எங்கள் நாணயமும் நம்பிக்கையுள்ளதுமான வர்த்தகஸ்தலத்தின் கியாதி ஒரு முறை பரீட்சித்தால் விளங்கும் தயவுசெய்து ஒரு முறை பரீட்சியுங்கள்.

ஜாலால் அண்டு சன்ஸ்,

வெஸ்டு அண்டு கெடியாரம் வியாபாரிகள்,

61, ராட்டன்பஜார், சென்னை.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.